நல்லூர் ...
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 புரட்டாதி 19 முஹர 30 இதழ் 237
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (5—10—86)

மூன்றும் சுற்றுப்பேச்சுவார்த்தை:

## எம்.ஜி.ஆர். போராளிகளை சந்தித்துப் பேசுவார்

(சென்னை ஒக்டோபர் 4)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் இவ்வாரமுற்பகுதியில் போராளிகள் குழுத் தலைவர்களை சந்தித்து இனப்பிரச்னை தொடர்பாக நடைபெறவுள்ள மூன்றும் சுற்று பேச்சுவார்த்தை பற்றி கலந்தாலோசிப்பார் என தெரியவருகிறது

அண்மையில் தமிழக முதல்வர், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை புதுடில்லியில் சந்தித்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் வெளிவிவகார அமைச்சர் சிவ்சங்கர், கொள்கை திட்டமிடல் ஆலோசனை குழுவின் தலைவர் திரு.ஜி பார்த்தசாரதி, திரு பி சிதம்பரம் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி திரு. ராமச்சந்திரனுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துக்கூறினர். [11ம் பக்கம் பார்க்க]

● வெலிக்கடை சிறையில் தமிழ்க் கைதிகள் ஆர்ப்பாட்டம்:

# காவலிலிருந்த ராணுவம் துப்பாக்கிப் பிரயோகம்

## மூன்று தமிழ் இளைஞர்கள், இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் படுகாயம்

(நமது நிருபர்)

**வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி, வெலிக்கடைச் சிறைக் கூண்டுக்குள் இருக்கும் மற்றும் இளைஞர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.**

**இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த சமயம் சிறைச்சாலைக்கு வெளியில்காவலிலிருந்த இராணுவத்தினர் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கித்துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் மூன்று தமிழ் இளைஞர்களும் இரு சிறைச்சாலைப்பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் படுகாயமடைந்துள்ளனர்.**

பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தங்களை நீதிமன்ற விசாரணைக்குட்படுத்து அல்லது விடுதலை செய் என்ற கோரிக்கை உட்பட தமது அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி 6 கோரிக்கைகளை முன்வைத்துள்ளது தெரிந்ததே.

இக்கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டத்தை, வெலிக்கடைச் சிறையிலும் பூஸாமுகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் யுவதிகளுள் 210 பேருக்கு மேற்பட்டோர் அனுஷ்டித்து வருகின்றனர்.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திலிருப்போரில் 24 பேர் மரணத்தறுவாயில் இருப்பதாக ஒரு தகவல் கிடைத்துள்ளது.

மேலும் உண்ணாவிரதிகளுள் சிலர் ஆபத்தான நிலையில் இராணுவ ஆஸ்பத்திரிக்கு பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சைக்குட்படுத்தப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நேற்று பொது ஸ்தாபனங்களின் பிரமுகர்கள் சிலர் உண்ணாவிரதிகளைச் சென்று பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## சென்னையில் புதுடில்லி அதிகாரிகள்

சென்னை. ஒக்டோபர் 4

இலங்கை அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்ட புதிய ஆலோசனைகள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இந்திய அரசியல் சட்ட நிபுணர் திரு பாலகிருஷ்ணன், இணையமைச்சர் திரு பி. சிதம்பரம் ஆகியோர் சென்னையில் பேச்சுவார்த்தை நடாத்திவருகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து திரு. சிதம்பரம் போராளிகள்குழுத் தலைவர்களுடனும் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. [சி]

மாங்குளம்

## மக்கள் விடுதலைப்படை இராணுவம்மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு மாங்குளம் இராணுவமுகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது தமது மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் 'ஷெல்' தாக்குதலும் துப்பாக்கிப்பிரயோகமும்மேற் கொண்டதைத்தொடர்ந்து இராணுவத்தினர் மீண்டும் முகாமுக்குள் திரும்பிவிட்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் [11-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் போராளி ஒருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு திருமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவில் முகாம் அமைக்க வந்த இராணுவத்தினருடன் கடந்த இருநாட்களாக இடம்பெற்ற நேரடி மோதலின்போது தமது வீரர் ஒருவரும் பலியானதாக தமிழீழ விடுதலைப் புலிப்படையின் அமைப்பு அறிவித்துள்ளது. [11ம் பக்கம் பார்க்க]

மட்டு.மாவட்டத்தில்

## புலிகள்-கமாண்டோக்கள் மூன்று மணிநேர கடும் சமர்

யாழ்ப்பாணம் ஞாயிறு மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்து சென்ற கமாண்டோக்களை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிப்படையினர் தாக்குதல் மேற்கொண்டனர். இதனைத்தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையில் கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

நேற்று முன்தினம் சுமார் 3மணித்தியாலங்களுக்கு இந்த நேரடிமோதல் இடம்பெற்றது.

இதுசம்பந்தமாக விடுதலைப் புலிப்படையினர் விடுத்துள்ள [11ம் பக்கம் பார்க்க]

மாணவர், பொதுமக்களின்—

## பாதயாத்திரை முடிவுற்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு சிறைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் ஆதரவாகப் பாத [11-ம் பக்கம் பார்க்க]

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

மலிவு விற்பனை

எமது வாடிக்கையாளர்களை புதிய முகவரிக்கு அழைக்கும் முகமாக இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் 31ம் திகதிவரை நாம் அவர்களுக்கு வழங்கும் தீபாவளி மலிவுவிற்பனை லேடன் காமென்ஸ் உற்பத்திகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரை சகலருக்கும் ஏற்ற அணி ஆடைகளை விசேட விலைக்கழிவும் மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

லேடன் காமென்ஸ்

235, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரச்சந்தி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(C 5013) தொலைபேசி இல 23603

● இம்மாதம் 10-ம்திகதியிலிருந்து—

## தமிழீழ இராணுவத்தின் மாதாந்த அதிர்ஷ்டலாபசீட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழீழப் போர்நிதிக்கான மாதாந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தமது ஸ்தாபனத்தினால் இந்த மாதம் 10ம்திகதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்படுவதாக தமிழ் ஈழ இராணுவ ஆணைச்சபை நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறீலங்கா அரசினால் நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பு, சுரண்டல் ரிக்கெட் ஆகியவற்றை ஏற்கனவே எமது ஸ்தாபனத்தினால் தடைசெய்யப்பட்டதை மக்கள் அறிவார்கள்.

சிறீலங்கா அரசும் இதனை பாதுகாப்பு நிதி என்ற முறையில் தமிழினத்தை அழிக்க எம்மினத்திலிருந்து நாகரீக [11-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய பொருட்கள் Fridge Gurundig 20'' Colour T. V., National 17'' B/W T.V. Children's Cycle. Pram Zink என்பன விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க 333, Navalar Road Jaffna. C4989

இரண்டு ஏர்கண்டிஷன்கள் (Room Air conditioners) விற்பனைக்குண்டு தேவை ஏற்படின் ஆலோசனையுடன் பொருத்திக் காடுக்கப்படும். ஒரு [Juice Cooler] ஜூஸ் கூலர் ஒரே நேரத்தில் மூன்றுவித பானம் குளிரூட்டக்கூடியதும் விற்பனைக்குண்டு ''ASB Trade and Engineering'', 12, நல்லூர் ஒறுக்கு வீதி. யாழ்ப்பாணம். (C4957)

நவீன வீட்டுத் தள்பாடங்கள் அலுமாரி, கட்டில், Foam Rubber ஹோல் செற், Formica வட்ட சாப்பாட்டு மேசைகள், தேக்கு Show case, நாஷனல் T. V., கசற் றேடியோ, பீங்கான், கிளாஸ் வகைகள், Pressure Cooker, எவர்சில்வர் பாத்திரங்கள், பியர்கிளாஸ் Chest of Drawers சிங்கர் மெசின், Fan மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு 826, பிரதான வீதி யாழ்ப்பாணம். (சென். சாலிஸ் பாடசாலையருகில்) C 4967

4 Burner Elec. Cooker, Gas Cooker, Washing Machine, Sony 20'' T V and Pedastral Fan, For Sale. அருள்தாஸ், 10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். [C-4971]

உள்நாட்டு, வெளிநாட்டு, புதிய, பழைய குளிர்சாதனப் பெட்டிகள், Deep freezer, கசட் றேடியோக்கள், Imported baby cot, washing machine, T V game, Kenwood Chief, கட்டில்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், Blender, டெலஸ்கோப், சுவர் மணிக்கூடுகள், Pressure cooker, Projector மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு சி.பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்) (C 4928)

2½ பரப்புக்காணி மாவத்தை றோட், வேப்பியனை. அராலி தெற்கு, அராலியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் விலாசம்; திருமதி வள்ளிப்பிள்ளை சதாசிவம், அம்பனை சுன்னாகம் மேற்கு, சுன்னாகம். [C-4891]

Morris Minor இரண்டு கதவுகள் EY Series 40 M P G. ரூ- 9000/-, சிங்கர் ZIG-ZAG Electric தையல் மெசின் ரூ-3000/ மாலை 3-6 மணி, ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [C-4997]

புதிய எலற்றிக் ரைப்ரைட்டர் விற்பனைக்கு உண்டு மலிவு விலையில் கொடுக்கப்படும் தொடர்பு கொள்க 39, சோமசுந்தரம் அவனியூ யாழ்ப்பாணம். (C4993)

கோழிக்கூடு உணவுப் பாத்திரங்களுடன் விற்பனைக்குண்டு மாசியடபிட்டிச் சந்திக்கு அருகாமையில் உள்ள கம்மாலையில் தொடர்பு கொள்ளவும். (C 4996)

## விற்பனைக்கு

[Typewriters] தட்டச்சு இயந்திரங்கள், Standard Portable மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. Fudo Enterprises, Jaffna Road, மானிப்பாய். Near [Siva Studio Bitsman] [C5004]

எம்மிடம் குர்ஆன் ஷரீபுகள் தொப்பி தஸ்பீஹ் மணி, சிறுமா மிஸ்வாக், திறம் அத்தர் ஊதுபத்தி வகைகள் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு. பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்: பிரபல இஸ்லாமிய புத்தக வியாபாரி P M மீராமுகிதீன் லெப்பை, No1'/1 ஏ.பீ.லேன், யாழ்ப்பாணம். (C 5012)

## தேவை

யாழ்-மதுரகானசபா தயாரிக்கும் யாழ்ப்பாண வரலாற்றுத் திரைப்படத்தில் நடிகைகள், நடிகர்கள், பின்னணிப் பாடகர்கள், மேக்கப்பாளர் தேவை 10-10-86முன் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். 140, அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C 4980]

சகல வசதிகளுடனும் தொலைபேசி உட்பட மேல் மாடிவீடு வாடகைக்குத் தேவை. சுண்டுக்குளியில்விரும்பத்தக்கது தொடர்பு: திருஞானஸ் கட்டிடம், யாழ்ப்பாணம். [C 4978]

பிறசியர் மட்டும் தைப்பதில் நன்கு அனுபவமுள்ளவர்களுக்கு உடன் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும். ஒரு டசின் பிறசியர் தைப்பதற்கு சகல கொடுப்பனவுகளுமாக 24/- வேதனம் கொடுக்கப்படும். தங்கும் வசதி இல்லை. வேலைவாய்ப்பு விரும்புபவர்கள் கீழ் காணும் முகவரிக்கு உடன் நேரில் சமூகம்தரவும்: A. S. பொன்னம்பலம், [மருதனமடத்திற்கும் இணுவில் காலிங்கன் தியட்டருக்கும் இடையில் உள்ள மாடிக்கட்டடம்], காங்கேசன்துறைவீதி, இணுவில். [C 4942]

நூலகர் [Librarian] உரும்பிராயில் உள்ள எமது நூலகத்திற்கு நூலக விஞ்ஞானம் கற்றுத் தேர்ந்து முன் அனுபவம் பெற்ற பெண்மணிகள் தேவை. எல்லா தகைமைச் சான்றிதழ்களுடனும் தாம் விரும்பும் வேதனத்தைக் குறிப்பிட்டு 9-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். அனுபவமற்றவர்களின்விண்ணப்பங்களும் பழகுனர் பதவிக்கு பரிசீலிக்கப்படும். நிர்வாகி, யூனிபோ, வேம்பன் வீதி, உரும்பிராய். [C-5006]

### பயிற்சிகள்

Radio, T.V Repairing செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. விபரங்கட்கு: Electronic Centre கல்வளை றோட், சண்டிலிப்பாய். ஆரம்பம: 10-10-86 Sat, Sun பி.ப 5.00 - 8.00. (C 4960)

## தேவை

விற்பனைப் பிரதிநிதிகள் [Sales Reps] விற்பனையாளர்கள், ஆண் பெண் Packers. கிளைமுகமையாளர்கள் Branch Managers] உடன் தேவை. 35 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுந்த சம்பளம் நேர்முகப் பரீட்சையின்போது தீர்மானிக்கப்படும். 10 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும். The group Personal Manager U N Group of Companies. Karaveddy North, Karaveddy. [C 4965]

சாவகச்சேரி வேல் சினிமா தியேட்டர் வீதியிலுள்ள குணம் மோட்டோஸ் தொழிலகத்திற்கு அனுபவம் வாய்ந்த லேத்மன் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். காலை 9 மணிமுதல் மாலை 5மணிவரை மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் (C 4963)

## சேவை

காலை முதல் மாலைவரை எந்நேரமும் பஸ் நிலையத்தில் ''போட்டோ ஸ்ரட்'' பிரதிகளை எடுத்துக்கொள்ள மகிமிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [C4835]

உள்நாட்டு/வெளி நாட்டு குளிர்சாதனப் பெட்டிகள்/ வீட்டு மின்சார உபகரணங்கள, குளிரூட்டிகள் டீப் பிறீசர்கள், கைத்தொழில் இயந்திரங்கள் எமது பல வருடவெளிநாட்டு, உள்நாட்டு அனுபவத்தின் மூலம் நேரடியாக எம்மால் சீரமைக்கப்பட்டு ஸ்பிறே வர்ணம் தீட்டி புதியவை போல் சீரமைக்கும் சேவையை உத்தரவாதத்துடன் ஆரம்பித்துள்ளோம். பெங்குயின் எயார் கொன் என்ஜினியர்ஸ், A B. சபாநாதன் and சி. கோபாலரட்ணம் 41, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [C 4876]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

St. John's College Jaffna
OLD BOYS ASSOCIATION ANNUAL RE-UNION
**18th October – 1986**

Programme:

| | | |
|---|---|---|
| 7-00 | a. m. | Service |
| 8-00 | a. m. | Breakfast (Rs. 10/- per head) |
| 9-00 | a. m. | Cricket Match |
| 1-00 | p. m. | Lunch Rs. 20/- per head) |
| 2-00 | p. m. | Annual General Meeting |

N. S. THANAPALAN
Hony. Secretary.
A 1437

## வகுப்புகள்

108 Brown Road, A/L 87. பௌதீக இரசாயனம் ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 8-10-86 புதன் 6-15 A M நேரம்: திங்கள், புதன் 6-15 A M. [C4984]

83ம் ஆண்டிற்கான G.A.Q வெளிவாரி பட்டப்படிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன பல்கலைக்கழக பதிவுகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S அருள்நங்கை, உயர்கலைக் கல்லூரி, 73. ஆனைபந்தியடி. யாழ்ப்பாணம். [A 1424]

## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் தியேட்டருக்கும் லிடோ தியேட்டருக்கும் இடைப்பட்டதாகவும் நல்ல வியாபாரம் நடைபெறக்கூடியதுமான ஒரு கடை வாடகைக்கு உண்டு விபரங்கட்கு: விளம்பர இல C 4999, ஈழநாடு. யாழ்ப்பாணம். (C 4999)

''சிறிய குடும்பத்திற்கு வீடு அல்லது பகுதி வீடு, திருநெல்வேலி, கொக்குவில், நல்லூர், வண்ணார்பண்ணை, கந்தர்மடம் பகுதியில் தற்காலிகமாகவோ அல்லது வருடக் கணக்கிலோ வாடகைக்குத் தேவை விண்ணப்பிக்கவும்! விளம்பர இல 4964, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். (C 4964)

## மணப்பந்தல்

இதோ! எம்மிடம் டொக்டர், எஞ்சினியர் தொடக்கம் கமக்காரர் வரை ஆண், பெண் எல்லாச் சாதி சமயத்திலும் இருக்கிறார்கள் ஞாயிற்றுக்கிழமையில் குறிப்புடன் வருவோர் உடனே தாமே தெரிந்தெடுத்துச்செல்லலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். C-4750

யாழ்ப்பாண கத்தோலிக்க குருகுல மணப்பெண்ணுக்கு 33-39 வயதுக்கிடைப்பட்ட நடுத்தரவகுப்பான மணமகன் தேவை. செவ்வாய்குற்றமுள்ள இந்து வேளாள எஞ்சினியர் மணப் பெண்ணுக்கு 31-38 வயதுக் குட்பட்ட மணமகன் தேவை, இந்து உயர்குல [Vegitarian] மணப்பெண்ணுக்கு 38-45க்குஇடைப்பட்ட மணமகன் தேவை. இந்து பள்ளர் இனபட்டதாரி மணமகனுக்கு 37 வயதுக்குட்பட்ட மணப்பெண்தேவை வேளாள கிறிஸ்டியன் உத்தியோகமான பெண்ணுக்கு 28-40 வயதுக் கிடைப்பட்ட மணமகன் தேவை. வேளாள இந்து அரசாங்க மணப்பெண்ணுக்கு 30 வயதுக்கு மேற்பட்ட மணமகன் தேவை. இந்து வேளாள எக்கவுண்டன் பெண்ணுக்குகுற்றமுள்ள 36-42 வயதுக்கிடைப்பட்ட மணமகன் தேவை. மங்கள ஏஜன்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C 4954]

இந்து வேளாள சைவ போசன மணப்பெண்ணுக்கு 30 - 38 வயதுக்கிடைப்பட்ட T A, B A அதனோடு ஒத்து வரக்குடிய மணமகன் தேவை. 50 வயதுக்கு மேற்பட்ட வேளாள இந்து கணக்காளருக்கு 37 வயதுக்கு மேற்பட்ட மணப்பெண் தேவை தாரமிழந்தோரும், விவாகரத்தானோரும் விண்ணப்பிக்கலாம். மங்களஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் [C 5000]

## நவராத்திரி விழா

இளவாலை, சனி

ஜி.ஜி லெட்சுமண சுவாமிஜியின் இளவாலை ஆச்சிரமத்தில் நவராத்திரி விழா நேற்று 4ம் தேதி முதல் வெகு சிறப்பாக நடைபெறும். (ஒ)

★

ஆனைக்கோட்டை, சனி

ஆனைக்கோட்டை ஆலடி வைரவர் ஆலயத்தில்தினமும் மாலை 6-00 மணிக்கு நவராத்திரி விழா விசேஷ பூசைகளுடைய நடைபெற மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினர் ஏற்பாடுசெய்துள்ளனர்.

★

சுழிபுரம்- சனி

பண்ணாகம் ஸ்ரீ முருகன் சனசமூக சேவா வாலிபர் சங்கத்தினரும் இந்து சமயவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து நடாத்தும் நவராத்திரிவிழா சங்க வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது

★ ★ ★

நல்லூர், சனி

இளம் கலைஞர் மன்றத்தின் நவராத்திரி கலைவிழா இன்று தொடக்கம் யாழ்ப்பாணம் சட்டநாதர் வீதி இசையரங்கில் நடைபெறவுள்ளது. (வா)

## யாழ் செயலகத்தில் கலைமகள் விழா

சண்டுக்குளி, சனி

யாழ் அரசாங்க செயலகத்தில் எதிர்வரும் 10ந் திகதி காலை கலைமகள் விழா கொண்டாடப்படவுள்ளது.

யாழ் செயலக நலன்புரிச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் விழா யாழ் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

## கடவுச்சீட்டு படிவங்கள் தட்டுப்பாடு

சுண்டுக்குளி சனி

யாழ் செயலகத்தில் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பப் படிவங்களுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பப்பத்திரங்கள் பல மாதங்களாக ங்கு இல்லாதிருந்து கடந்த மாதம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. விண்ணப்பதாரிகள் 1 ரூபா பணம் செலுத்தி இவற்றைப் பெற்று வந்தனர். தற்போது இவை முடிவடைந்து விட்டதால் வெளியாரிடம் அதிக விலை கொடுத்தே இவற்றைப் பெற்றுச் செல்கின்றனர்.

## மணப்பந்தல்

35 வயதுடைய ஆங்கில ஆசிரியைக்கு கிறிஸ்தவ மணமகன் தேவை. ஆசிரியர் அல்லது அதற்குக் கூடிய சமூக அந்தஸ்துடையவர் விரும்பத்தக்கது வீடும் போதிய சீதனமும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்க; சகாய திருமணசேவை, புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. (C 5007)

இலண்டனில் புகையிரத பகுதியில் ஓய்வூதிய உரிமையுடன் நிரந்தரபதவி வகிக்கும் பிரித்தானிய பிரைஜாஉரிமையுள்ள உயர் இந்துகுலத்தைச் சேர்ந்த 32 வயதுடைய மகனுக்கு 28 வயதுக்குட்பட்ட அழகு, கல்வி, உயர் குடும்ப அந்தஸ்து உள்ளமணப் பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர் சீதனம் எதிர்பார்க்கப்படும். வெளிநாடுகளில்வதியும் பெண்களின் பெற்றோரும்விண்ணப்பிக்கலாம் சாதகக்குறிப்பு, அண்மையில் எடுத்த புகைப்படம் மற்றைய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 4983, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 4983]

# ராஜ்காட் வேட்டுக்கள்

அண்ணல் காந்தியின் 'ராஜ் காட்' சமாதியில் வைத்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திமீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சி முறியடிக்கப்பட்டது. ஆறுதலளிக்கும் ஒரு விடயமாகும். ஆயினும் அம்முயற்சியின் பாணியையும், அது இடம்பெற்ற சூழ்நிலையையும் ஆராயும்போது, இந்த 'ராஜ்காட்' கொலைமுயற்சி முறியடிப்புடனேயே ராஜீவ்மீதான கொலைப்பயமுறுத்தல்களுக்கும் 'சமாதி' கட்டப்பட்டு விட்டதாக எவரும் எண்ணிவிட முடியாது.

...ப் பிரிவும் சேவையிலீடுபட்டதாகக் கூறப்பட்டது

இதில் முக்கியமென்னவென்றால், பிரதமர் ராஜீவின் பரிவாரம், மற்றும் காந்தி அஞ்சலிக்கு அன்று வந்திருந்தவர்களைவிட, பாதுகாப்புப் பிரிவினரின் எண்ணிக்கையே கூடுதலாக இருந்துள்ளது.

ஏனெனில் அன்றைய காந்தி ஜயந்தி தினத்தின் கீதாஞ்சலிக்காகவும், தொடர்ந்து ஜனாதிபதி - பிரதமர் ஆகியோரின் மௌனப் பிரார்த்தனைக்காகவும் குறிப்பிட்ட மிகச் சிலரே 'ராஜ்காட்' சமாதியருகே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இறுதியில் துப்பாக்கிநபர் ஒருவாறாக அடையாளங்கண்டு பிடிக்கப்பட்டான். ஆயினும் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னரே இது நடந்துள்ளது

வெள்ளம் வருமுன் அணை கட்டுதல்'; இதுவேபாதுகாப்பு என்பதன் அர்த்தமாகும். ஆனால் அன்றைய ராஜ்காட் சம்பவம் இதற்கு எதிர்மாறாக நடந்துள்ளது.

ராஜீவ் அன்று உயிர்தப்பியது அவரது சொந்த அதிஷ்டமாகும்: ஆனால் அவருக்கு வேலி போட்டவர்களால் தம்மிடையே இருந்த துவாரத்தை அறிடமுடியவில்லை

இந்நிலையில் ராஜீவின் பாது

ராஜீவின் தாயார் திருமதி இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டது முதற்கொண்டே ராஜீவ்மீது கொலைப்பயமுறுத்தல்கள் அவ்வப்போது விடுக்கப்பட்டு வந்துள்ளன. இப்பயமுறுத்தல்களுக்கு சவாலாக தீவிரபாதுகாப்பு ஏற்பாடுகளை இந்திய பாதுகாப்புச்சேவை ஏற்படுத்தியிருந்தது.

ஆயிரத்து ஐநூறு பேர் கொண்ட பிரத்தியேக பாதுகாப்புச் சேவைப் பிரிவொன்றும் ராஜீவ்காந்தியின் பாதுகாப்புக்கருதி இயங்கிவருகின்றது ஆயினும் இந்தஏற்பாடுகளையெல்லாம் 'ராஜ்காட்' சூட்டுச் சம்பவம் துச்சமாக்கி விட்டுள்ளது.

சம்பவதினம் 'ராஜ்காட்' பலத்த பாதுகாப்புக்குட்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அன்றையதினம் 250 பேர்கொண்ட பாதுகாப்

இந்நிலையில் ஒரு கவசம் போன்று செயல்பட்டிருக்க வேண்டிய 'அந்த 250' பேரும் அவ்வேளை என்ன செய்து கொண்டிருந்தார்கள்? என்பதே கேள்விக்குரியதாகியுள்ளது.

துப்பாக்கிநபர் திடீரெனப் பிரவேசிக்கவில்லை. அல்லது ராஜீவுடனிருந்த கூட்டத்தில் ஒருவனாகவும் அவனிருக்கவில்லை

பதுங்கித்தாக்கும் (Ambush) ஒரு கெரில்லா போல புதர் ஒன்றுக்குள்ளிருந்து அவன் செயல்பட்டுள்ளான். இத்தாக்குதல் முறை சாதாரணமானது

ஆனால் அன்று 'ராஜீவின் பாதுகாப்பு' என்று புறப்பட்டவர்கள் ராஜ்காட்டுக்கு ஏதோ புதியவர்கள்போல இருந்துள்ளார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

காப்பு என்பது தொடர்ந்து கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்கு விடைகாணுமவரை ராஜ்காட் வேட்டுகள் இந்தியாவின் மூலைமுடுக்குகளில தொடர்ந்தாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

* * *

# உலக அரங்கு

## டானிலோவ் ராஜதந்திரம்

அமெரிக்கப் பத்திரிகையாளர் நிக்கோலஸ் டானிலோவ் ஒருமாதகால தடுப்புக்காவலின் பின்னர் சோவியத் அரசினால் கடந்தவாரம் விடுதலை செய்யப்பட்டார்.

உளவாளி எனக் காரணங்காட்டி சஞ்சிகை ஒன்றின் ஆசிரியரான இவர் மாஸ்கோவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

ஓர் உளவாளி என்ற ரீதியில் இச் சாதாரண பத்திரிகையாளர் கைதானாலும் இவர் விடுதலையானபோது ஒரு ராஜதந்திரப் புள்ளியாகவே வெளியேறினார்.

இரு வல்லரசுகளின் சந்திப்பை இவரது தடுப்புக்காவல் நிர்ணயித்ததே இந்நிலைக்குக் காரணமாகும்.

டானிலோவ் விடுதலைசெய்யப்படாதவரை சோவியத் அதிபர் கோபச்சேவுடனை அமெரிக்க அதிபர் றீகனின் சந்திப்பு இடம்பெறுவது சாத்தியமல்ல என்று றீகன் நிர்வாகம் அறிவித்துள்ளது இதனையடுத்து சோவியத் அரசு எதுவித நிபந்தனையுமின்றி டானிலோவை விடுதலை செய்தது.

டானிலோவ் ஒரு சாதாரண நபர் என்று அமெரிக்கா கூறியுள்ளபோதிலும் உளவு வேலையில் ஈடுபட்ட போது கையும் மெய்யுமாக இவர் கைதானார் என்று சோவியத் கூறியிருந்தது.

இதேவேளை சோவியத் நாட்டவரான சக்காரோவை ஐ நா வில் பணியாற்றியவர்) அமெரிக்க அரசு ஓர் உளவாளிஎனக் குற்றஞ்சாட்டி தடுத்துவைத்திருந்தது

இறுதியாக டானிலோவ் விடுதலை செய்யப்பட்டதையடுத்து சக்காரோவையும் அமெரிக்கா விடுதலை செய்தது.

சோவியத் யூனியனாலும், அமெரிக்காவாலும், இவ்விருவரும் பரஸ்பரம் உளவாளிகள் எனக்கருதப்பட்டாலும். இவ்விருவரினதும் அமெரிக்க சோவியத் வாழ்க்கை றீகனையும் கோபச்சேவையும் ஒரு மேசையில் சமரசம் பேச வைத்த நல்லகாரியத்துடன் முடிவடைந்தது மட்டும் ஏதோ உண்மையாகும்.

## அமெரிக்க தடை

இவ்வார உலக அரசியலில் முக்கியத்துவம் பெறும் அடுத்த நிகழ்ச்சியாக தென்னாபிரிக்காமீது அமெரிக்கா கொண்டுவந்துள்ள கடுமையான பொருளாதார தடை விளங்குகிறது

இத்தடை கொண்டுவரப்பட்டதைவிட இது நிறைவேற்றப்படுவதற்குப் பட்டபாடே பெரும்பாடாகவுள்ளது

அமெரிக்க காங்கிரஸின் (பாராளுமன்றம்) பிரதிநிதிகள் சபையில இப்பொருளாதாரத் தடை மீதான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டபோது, அதிபர் றீகன் இதனை தமது வீட்டோ

அனந்த்

அதிகாரத்தின் மூலம் ரத்துச் செய்தார்.

ஆனால் செனட் சபையில் அவரின் இந்த 'வீட்டோ' ஜம்பம் பலிக்கவில்லை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அங்கு தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத்தடை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து தென்னாபிரிக்காவுக்காக இதுவரை ஒலித்த றீகனின் குரலும் அடக்கப்பட்

(4ம் பக்கம் பார்க்க)

# வல்லரசு நாடுகளையே திணறடித்த பத்திரிகையாளர் டானிலோவ்

"வாள் முனையை விட பேனா முனை சக்திமிக்கது'' என யாரோ கூறி வைத்தார்கள். இந்தப் பேனா மன்னர்களில் முக்கியமானவர்கள் பத்திரிகையாளர்கள். ஒரு நாட்டின், இவ்வுலகின் அனைத்துத் துறைகளிலும் பத்திரிகைகள் எவ்வளவு ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. அப்படியானால் அந்தப் பத்திரிகைகளின் உயிர்நாடியாக விளங்கும் பத்திரிகையாளரின் சக்தி பற்றிச் சொல்லவே தேவையில்லை

இலங்கையில் தார்ஸி விட்டாச்சியின் '58 அவசரகால நிலை'' எழுப்பிய பூகம்பத்தை அனைவரும் அறிவோம், இந்தியாவில் ஒருமாநிலத்தின்முதல்வரையே தூக்கி வீசியவர்



அமெரிக்காவின் 'நியூஸ் அன்ட் வேர்ல்ட் ரிப்போர்ட்' வாராந்த சஞ்சிகையின் மாஸ்கோ பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு. டானிலோவின் கைது நியூயோர்க்கில் சோவியத்தின் ஐ நா பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகித்த திரு.

**ஒரு (அமெரிக்க) பத்திரிகையாளர் கைதானதால் வல்லரசு தலைவர்களின் உச்சிமகாநாடே கேள்விக்குறியாகியது...!**

அருண்ஷோரி என்ற பத்திரிகையாளர்.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி, 'சர்வ வல்லமை' மிகுந்த இரு வல்லரசுத் தலைவர்களையே வாய்ப் போரில் [War-of Words] இறங்க வைத்து, அவர்களுக்கிடையே நடைபெறவுள்ள உச்சி மாநாட்டைக் கேள்விக்குறியாக்கினார் ஒரு அமெரிக்கப் பத்திரிகையாளர்.

அவர் தான் இப்போது சர்வதேச 'பெயர்' பெற்றுவிட்ட நிக்கலஸ்டானிலொவ். 52 வயது நிரம்பிய திரு டானிலொப் கடந்த ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி மாஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.

ஜென்னடி ஸக்காரோவ் (Gennedy Zakharov வின் கைதுக்குப் பதில் நடவடிக்கையாகவே அமைந்தது என்பது ராஜதந்திரிகளின் கருத்தாகும்.

## ஸக்காரோவ் கைது

39வயதான திரு. ஸக்காரோவ் கடந்த ஆகஸ்ட் 23ம் திகதி நியூயோர்க்கில் கைது செய்யப்பட்டார்

திரு ஸக்காரோவ் ஐ நாவில் சோவியத் பிரதிநிதிக் குழுவில் விஞ்ஞானியாகக் கடமையாற்றுகிறார்.

இவர் கடந்த மூன்றாண்டுகளாக நியூயோர்க்கில் கல்வி பயிலும் கயானா நாட்டு மாணவரொருவரிடம் கம்பியூட்டர் தொழில் நுட்ப ரகசியங்களைக் களவாடித் தரும்படி கேட்டு அதற்குப் பணம் கொடுத்து வந்தாரென அமெரிக்கப் புலனாய்வுத் திணைக்களம் (எவ் பி. ஐ கூறுகிறது இந்த கயானா மாணவர் எவ். பி ஐ யின் உளவாளியாகக் கடமையாற்றியவர்.

ஆயினும் திரு ஸக்காரோவ் சோவியத் யூனியனுக்கு பயன்தரக்கூடிய தொழிநுட்ப ரகசியமெதையும் இம் மாணவரிடமிருந்து பெறவில்லை இதேவேளை திரு, ஸக்காரோவை மடக்க எவ். பி ஐ திட்டம் தீட்டியது. அது இந்த கயானா மாணவரிடம் எவ் பி ஐ 3 'தரம் குறைந்த' கம்பியூட்டர் தொழிநுட்ப ரகசியங்களைக் கொடுத்தது. நியூயோர்க் ரயில் நிலையமொன்றில் இந்த ரகசியங்களைக் கயானா மாணவரிடமிருந்து பெற்றுக் கொள்கையிலகாத்திருந்த எவ் பி ஐ. ஏஜண்டுகள் ஸக்காரோவை மடக்கிப்பிடித்தனர்.

## சோவியத்தின் ஆத்திரம

திரு ஸக்காரோவ் கைது செய்யப்பட்டது சோவியத் யூனியனின் உயர் அதிகாரிகளுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது என்றே கூற வேண்டும். ஆயுதக் கட்டுப்பாட்டுப் பேச்சுக்களை அதி உயர் மட்ட ரீதியில் நடத்துவதற்காக இரு வல்லரசுகளையும் சந்திக்கவைக்கப் பெருமுயற்சி எடுக்கப்பட்டுவரும் இவ் வேளையில் மூன்றாண்டுகளாக எவ் பி.ஐ கண்டும் காணாமல் விட்ட ஒரு விஷயத்தை கிளறி சோவியத்தை ஏன் சங்கடப்பட வைக்க வேண்டும் என அவர்கள் ஆத்திரமுற்றதில் நியாயமுண்டு தான்.

**இ. செந்தில்**

## டானிலொவ் கைது

கடந்த பல ஆண்டுகளாக மாஸ்கோவில் பணி புரிந்து வரும் திரு டானிலொவ் சரளமாக ரஷ்ய மொழியைப் பேசக்கூடியதாகவிருந்ததுடன் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் பல ரஷ்யர்களையும் தெரிந்து வைத்திருந்தார்.

திரு டானிலொவ்வின் சோவியத் ரத்தமும் ஓடுகிறதென்பது பலரறியாத ரகசியமாகும். அவரின் மூதாதையருள் ஒருவரான திரு. அலெக்சாண்டர் ஃப்ரோபொவ் 1825 ம் ஆண்டில் இவர் அங்கம் வகித்த 'டிசம்பர் குழு' உறுப்பினர்களுடன் சேர்ந்து ஸார் மன்னரைப்பதவிகவிழ்க்க சதிசெய்தார் என்ற குற்றச்சாட்டில் பல ஆண்டுகள் சைபீரியாவில் 'தண்டனை' அனுபவித்தார்.

திரு. ஃப்ரோலொவைப் பற்றி ஒரு புத்தகம் எழுத உத்தேசித்ததிரு டானிலொவ் ஆறுமாதவிடுமுறையில மாஸ்கோவை விட்டுப் புறப்படத் தயாரானார் - அதற்கு முன்னர் அவரது நண்பரென'க் கூறப்படும் மிஷின் என்ற நபர். மாஸ்கோவின் ஒதுக்குப்புறமொன்றில் டானிலொவிடம் 'பார்ஸல்' ஒன்றைக்கையளித்தார்

[4ம் பக்கம் பார்க்க]

## சக்தியின் பெருமை

### கௌரீதசகம்

பாதமலர் மனத்திருத்திப் பரவுதியா
னத்தகலாப் பண்பி னோர்க்கு
வாதனைசெ யவாத்தளையின் வருதுயர
மாய்த்தருள்வா ளுலகம் யாவும்
ஏதமற ஆளிறைவி யிறைவனுடற்
பாதிகொண்டாள் எழிலான் மிக்காள்
காதமரும் விழிகமல மானுமம்மை
கௌரியைநான் இறைஞ்சு கேனே.

பொருள்:- தனதுமலர் போன்ற பாதங்களை மனத்திலே பதித்து. துதிக்கும் நினைப்பு நீங்காத தன்மையரான அடியார் செய்கின்ற ஆசையாகிய பாசத்தால் மேன்மேலும் வருந்துன்பங்களை நீக்கியருள்பவளும், எல்லா உலகங்களையும் கேடின்றிக்காப்பவளுமாகிய நம்பெருமாட்டி சிவனுடைய திருமேனியின் பாதியைத் தனதாக்கிக் கொண்டவள், பேரழகு வாய்ந்தவள். அவளுடைய காதளவோடிய கண்கள் தாமரைமலர் போன்றவை. அவளே உலகமாதாவாகிய கௌரி, அவளை நான் புகழ்ந்து வணங்குகிறேன்.

தமிழில்: தி. சதாசிவஐயர்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம்: புரட்டாதி
திகதி: 19 (1986-10-05)
கிழமை: ஞாயிறு
திதி: துதியை
மு இ வரை
நக்ஷத்திரம்: சித்திரை
பி.ப. வரை

### மேடம்

குடும்பவிவகாரங்களில் பிணைப்புக்கள் பலப்படும்: காதல் விவகாரம் தோன்றும். ஸ்திரவழியாலும்புகழ் கிட்டும். தேடிய உறவு உங்களை நாடியேவரும். வெளியிடத் தொடர்பிலும் மாற்றம் உருவாகும்.

### இடபம்

கருத்தினில் மேலும் வாட்டிடும் பிணியும்தானே மிகையான போக்கினாலே மனதும் பாழாய்ப்போகும். பகைமூட்டம் தென்படும். போக்குவரத்துவிடயத்திலும் அவதானம் வேண்டும்.

### மிதுனம்

பிதாவழியாலும் நற்செய்தி கிடைக்கும். உறவினர் மத்தியில் உயர்வுக்கு இடமுண்டு: பெரியவர் ஆசிதாராளமாகக் கிடைக்கும். குடும்பத்திலும் பிளவுகள் மறையும் தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

### கடகம்

மனைசிறப்புமுண்டு. மன மகிழ்ச்சிக்கு இடமுண்டு. இடமாற்றத்திற்கான வழிவகைகள் வகுக்கப்படலாம் வாகன நலனும் உண்டாம். வாழ்வும் வளமாகும்.

### சிங்கம்

பொதுசன மதிப்பும் கிடைக்கும். புதுமையான எண்ணங்கள் நிறைவேறும். தொழில் துறையில் புதிய சாதனைகள் உருவாகும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிட்டும் மேலிடத்து ஆதரவும் பதவியுயர்வும் உண்டாம்.

### கன்னி

தொழில்துறையிலும் எதிர்பாராத நஸ்டத்திற்கு இடமுண்டு. நண்பர் ஒருவரின் கடிதம் வேதனையைத்தரலாம் அவசர முடிவைத் தவிர்க்கவும். அவப்பெயர் கேட்கவும் நேரிடும். முன்னேற்றம் தடைப்படும். குடும்பப் பிளவுகளும் வேதனையைத்தரலாம்.

### துலாம்

குடும்ப சுகக்குறைவு குறிக்கோளில் நடையும் உண்டு பிரயாணத்தைப் பிற்போடவும். வழக்கு விவகாரங்களில் மாட்டிக் சொள்ள நேரிடும் எதையும் சிந்தித்து செயலாற்றவும்.

### விருச்சிகம்

அறிவுப்பசிக்கு இன்றுதாராளமாக விருந்தி கிடைக்கும் இளம் ஜோடிகள் மகிழ்ச்சியடைவர். வாழ்வில் நட்பு கிடைக்கும். கற்றதனால் பயன் இன்று கிட்டும். ஆசிரியர்கள் போற்றப்படுவர். சுபதினம்.

### தனுசு

இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும் குறுக்கு வழியில் இறங்கவேண்டாம். இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள் முன்னெச்சரிக்கை நன்று.

### மகரம்

சனிவானவாழ்வு இன்றுமலரும். அன்னையின் ஆசி ஆதரவு தரும். மனைச்சிறப்புமுண்டு வியாபார நலனுமுண்டாம் உயர்கல்வி நாட்டமும் முண்டாம்.

### கும்பம்

புத்திரர்புகழ்உண்டு. வேண்டியளவுக்கு வெள்ளிப்பணம் துள்ளும். வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில் முன்னேற்றமுமுண்டு குடும்ப நலனுமுண்டு.

### மீனம்

ஆசைவார்த்தைமூலம் அகப்பட்டதைச் சுருட்டுவார்கள், கருத்து வேற்றுமைகள் உருவாகும். எதிலும் அவசரப் போக்கைக்கடைப்பிடிக்கவும் சிலருக்கு அன்னியவாசமும் ஏற்படலாம். கடன்படவும் நேரிடலாம்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

# வல்லரசு நாடுகளையே . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென...

நாலாபுறத்திலிருந்தும் சோவியத் உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்கள (கே. ஜி. பி) ஏஜண்டுகள் டானிலொவைச் சூழ்ந்தபோது. டானிலொவ் ஆச்சரியத்துடன்பார்த்தார். மிஷின் தமது ஞாபகார்த்தமாக சில பத்திரிகைத் துணுக்குகளை தருவதாக டானிலொவ் நினைத்தார்.

இது கைதான பின்னர் அவர் செய்தியாளரிடம் கூறியது

ஆனால் டானிலொவ்வின் முன்னால் அந்தப் பார்ஸல் உடைக்கப்பட்டபோது அதனுள் 'முக்கியம்' எனக் குறிக்கப்பட்ட வரைபடம் ஒன்றும், ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத் துருப்புகள் பற்றிய தகவல்களும் இருந்தன!!

திரு டானிலொவ் மாஸ்கோவின் லெஃபோர்ட்டோவோ சிறையில் அடைக்கப்பட்டார். சோவியத்தின் விமானப்படை தளங்கள், அணு ஆலைகள் ஆகியவை பற்றிய தகவல்களைப் பெறும் பொருட்டு சி. ஐ. ஏ க்காக டானிலொவ் பணிபுரிந்தார் என அவர் மீது சோவியத் குற்றம் சாட்டியது.

சோவியத்தின் குற்றவியல் சட்டம் 65 இன் கீழ் அவர் குற்றம் சாட்டப்பட்டார். கு ச 65. சோவியத்தின் நலனுக்கு பாதகம் விளைவிக்கக் கூடியத் தகவல்களை ஒரு வெளிநாட்டவர் பரிமாறல் களவாடல், சேகரித்தல் போன்ற குற்றங்களை வரையறுத்து அதற்கு 7 முதல் 15 வருடகால சிறைத் தண்டனை விதிக்கவும் வகை செய்கிறது.

திரு டானிலொவ் கைது செய்யப்பட்டதையடுத்து அமெரிக்கா பெரும் சர்ச்சையைக்கிளப்பியது. ஒரு பத்திரிகையாளர் அதுவும் குற்றமிழைக்காத வெளிநாட்டு. பத்திரிகையாளரை கைது செய்தது நாகரிகமல்ல வெனவும் எனவே உடனடியாக டானிலொவ் விடுதலைசெய்யப்படவேண்டும் எனவும் அமெரிக்கா வற்புறுத்தியது. அதேவேளை ஸக்காரோவ் குற்றவாளி எனவும் கூறப்பட்டது. ஜனாதிபதி றீகன் தமது ஐ நா. சபைக் கூட்டத்திலும் இக் கருத்தையே வலியுறுத்தினர்

### கோர்பச்சேவின் ஒப்பீடுகள்

அமெரிக்காவின் இந்த பிரசாரத்துக்கு பதில் பிரசாரத்தை சோவியத் மேற்கொண்டது மிகைல் கோர்பச்சேவ், டானிலொவ் உளவாளி என்பதை வலியுறுத்தியதுடன் 60ம் ஆண்டில் சோவியத்தினால் சுடப்பட்ட யூ 2 விமானத்தின் ஓட்டியான கரிபவர்ஸ் விடயத்திற்கும், 83ம் ஆண்டில் சோவியத் ஆகாயப் பிராந்தியத்தில் 239 பிரயாணிகளுடன் தென்கொரிய விமானம் சுடப்பட்ட சம்பவத்துடனும் ஒப்பிட்டுப் பேசினார்

ஸக்காரோவ் கைதும் டானிலோவ் கைதும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தம்பட்டவையல்ல என அமெரிக்கா வாதிட்டாலும், முதலாமவரின்கைதின் எதிர்விளைவே மற்றையது என உலகத்தாரை எண்ணவைப்பதில் சோவியத் வெற்றிகண்டுள்ளது

அண்மைக்காலமாக அமெரிக்க அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரங்களையிட்டு அந்நாடு அதிருப்தி அடைந்துள்ளது அத்துடன் பல சந்தர்ப்பங்களில் றீகனுக்கு கோர்பச்சேவ் அதிகளவல் விட்டுக்கொடுத்துவிட்டார் எனச்சில சோவியத் அதிகாரிகள் அதிருப்தியடைந்துள்ளனர். இதனை மறுதலிக்கவே ஸக்காரோவ் கைதுக்குப்பதில் நடவடிக்கையாக டானிலோவ் கைது செய்யப்பட்டார் எனவும் கருத்து நிலவுகிறது.

### பல முயற்சிகள்

கைது செய்யப்பட்ட இருவரையும் விடுவிக்கதிரைமறைவில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. டானிலொவின் விடுதலைக்குப் பதிலாக ஸக்காரோவை அமெரிக்காவினால் சோவியத் தூதரின் பொறுப்பில் பிணையில விட அமெரிக்க ஆலோசனை கூறியதாயினும் சோவியத் அதனை நிராகரித்துவிட்டது.

இதனிடையே டானிலொவ் விடுதலை செய்யப்படாவிட்டால் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் நடைபெறுவதாகவிருக்கும் றீகன் கோபசேவ்உச்சிமாநாடுநடைபெறாது என அமெரிக்க அதிகாரிகள் பயமுறுத்தினர். அதற்கும் சோவியத்மசியவில்லை. சோவியத்தைப் பொறுத்தவரை அதன் பதில்ஸக்காரோவ் விடுதலையானால் டானிலொவ் விடுதலையாவார் என்பதே.

இதேவேளை டானிலொவ் கைதுக்கு தனது எதிர்ப்பைக் காட்டுமுகமாக அமெரிக்கா. சோவியத்தின் ஐ நா குழுவிலுள்ள 25 பேரை அக்டோபர் 1-ம் திகதியளவில் அமெரிக்காவை விட்டு வெளியேறும்படி பணித்தது. அத்துடன் அமெரிக்காவிலுள்ள சோவியத் ராஜதந்திர வர்த்தக அலுவலகங்களின் ஊழியர் எண்ணிக்கையைக் குறைக்கவும் அமெரிக்க - சோவியத் கலாசாரக் குழுக்களின் சந்திப்புக்களைக் குறைக்கவும் அமெரிக்கா ஆலோசித்து வந்தது.

### டானிலோவ் விடுதலை

செப்ரெம்பர் மாதம் 29ம் திகதி சோவியத் யூனியன் டானிலோவ் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்என அறிவித்தது இதனையடுத்து ஸக்காரோவும் சோவியத்செல்ல 'நிபந்தனையின்றி' அனுமதிக்கப்பட்டார் அத்துடன் யூரி ஓர்லோவ் என்னும் சோவியத்பிரஜை அமெரிக்கா செல்லவும் சோவியத் அனுமதிக்கவுள்ளது.

இதனையடுத்து கேள்விக்குறியாக்கப்பட்டிருந்த றீகன் - கோர்பச்சேவ் உச்சி மாநாடு இம்மாதம் ஐஸ்லாந்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

எப்படியிருப்பினும் ஸக்காரோவ், டானிலொவ் விடுதலைகளுக்கு பெரும் ராஜதந்திர நடவடிக்கைகளே காரணமாக அமைந்தன வெளியாக இருவல்லரசுகளும் கடும்போக்கினை கையாண்டாலும், மறைமுகமாக இவ்விருவரையும்பிரச்னையின்றி விடுவிக்கவே முயற்சித்தன அதனால்தான் இவர்களுக்குவிடுதலையும் கிடைத்தது.

எது எவ்வாறு இருப்பினும் நிக்கலய் டானிலொவ் என்ற தனிமனிதன்-ஒருபத்திரிகையாளர் உலகின் அதிசக்தி வாய்ந்த இருநாடுகளையே சுமார் 30 நாட்களுக்கு திணறவைத்தார் என்பதே உண்மை!

### அமெரிக்க கைதிகளும் சோவியத் பதிலடிகளும்

ஒவ்வொரு முறையும் சோவியத் யூனியனின் ஐ. நா. பிரதிநிதி ஒருவர் அமெரிக்காவில் கைது செய்யப்படும்போது, சோவியத்தும் பதில் நடவடிக்கையாக தனது நாட்டிலுள்ள அமெரிக்க பிரஜை ஒருவரைக் கைது செய்யும்.

63 இல்: சோவியத் ஐ. நா. பிரதி ஒருவர் கைது பதில் நடவடிக்கையாக யேல் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரை சோவியத் கைது செய்தது. இவரது விடுதலையை அப்போதைய ஜனாதிபதி கென்னடி பகிரங்கமாகக்கோரினார். 78 இல் சோவியத் ஐ. நா. பிரதிநிதி கைது பதில் நடவடிக்கையாக அமெரிக்க வர்த்தகர் ஒருவர் சோவியத்தில் கைது இவர் பின்னர் இன்னொரு சோவியத் உளவாளியுடன் பரஸ்பரம் உளவாளி பரிமாற்ற விடுதலை செய்யப்பட்டார். 86ல்- சோவியத் ஐ நா பிரதிநிதி ஸக்காரோவ் பதில் நடவடிக்கையாகஅமெரிக்க பத்திரிகையாளர் டானிலோவ்கைது. இருவரும் பின்னர் விடுதலை செய்யப்பட்டதுடன் மேலதிகமாக ஓர் லோவ் என்ற சோவியத் dissident அமெரிக்கா செல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ)

### ராஜ்காட்...

[3-ம பக்கத் தொடர்ச்சி]

டது.

தென்னாபிரிக்கா விவகாரத்தில் 'மதில்மேல் பூனை'யாக றீகன் நிர்வாகம் செயல்பட்டு வந்தது. ஆனால் காங்கிரஸ் கொண்டுவந்துள்ள தீர்மானம் அமெரிக்கர்கள் எல்லோரும் 'றீகன்கள்' அல்ல என்பதை நிரூபிக்கின்றது.

தமது அரசுக்காக அமெரிக்க காங்கிரஸ் இதுவரை பொறுத்திருந்தாலும், தென்னாபிரிக்காவில் மனிதாபிமானத்துக்கு சவால் ஏற்பட்டதையடுத்து தாம் அமெரிக்கர்கள்என்பதை ஒதுக்கி சகமனிதர்கள் என்ற ரீதியில் தென்னாபிரிக்காமீது அமெரிக்க காங்கிரஸ் பொருளாதாரத்தடையைக்கொண்டு வந்துள்ளது

இதன்மூலம் ஜனாதிபதி ஆட்சியால் பெருமைப்படாதஅமெரிக்கர்கள் காங்கிரஸின் இந்த நடவடிக்கை மூலம் தாம் ஜனநாயகவாதிகள் என்பதை நிரூபித்துள்ளனர்.


**தொழில் பயிற்சிகள்--ஆரம்பம் 15-10-86**

[1] CITY AND GUILDS PART I AND PART II LONDON EXAMINATION 1987.
(2) மோட்டர், ரான்ஸ்போமர் றீவைண்டிங் பயிற்சி காலம் 6 மாதம்— முழுப்பயிற்சிக்கும் ரூபா 600/-
[3] வயறிங் பயிற்சி— HOUSE, FACTORY WIRING AND AUTO WIRING— I E E REGULATIONS காலம் 3 மாதம் — முழுப்பயிற்சிக்கும் ரூபா 300/-

**ஓ மே கா,**
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[ஈழநாட்டிற்கு எதிரில்] (A 1373)



**பிரயாண ஒழுங்குகள்**

**டென்மார்க் – கனடா – ஜேர்மனி**

ஆகிய நாடுகளுக்கு எங்கள் முகவர் கொழும்பில் இருந்து நேரே அழைத்துச் செல்வார்.

சிங்கப்பூர் — Housemaid; Railway Underground General Workers இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

சவூதி - Kuwait ஆகிய நாடுகளுக்கும் வருமான வாய்ப்புகள் செய்துகொடுக்கப்படும்.

**GROUP ATLANTIC**
(அடைக்கலமாதா கோவில் பின் பக்கம்)
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A - 1384)



**பிரயாண ஒழுங்குகள்**

**குவைத்**

| | |
|---|---|
| V. சிவானந்தன் | புங்குடுதீவு |
| P. யேசுதாசன் | H 298549 |
| S ஜெயபாலன் | F 252250 |
| J D ராஜசேகரம் | G 0343328 |
| M யோகநாதன் | F 019118 |
| S ஐயன்கரன் | H 035975 |
| K சிவகுகன் | H 0459989 |
| S முருகானந்தன் | H 0166706 |
| M. J விறிகாட் | G 0321752 |
| K. யேசுதாசன் | H 0460910 |
| P. பரமேஸ்வரன் | H 047824 |
| S. தேவராஜன் | H 0104191 |
| M. யோகநாதன் | F 019118 |
| A. M. விஜன்சூக்கிரியதாஸ் | H 0316064 |
| S M. ஆனந்தராஜா | H 0117679 |

மேற்குறிப்பிட்டிருக்கும் நபர்களுக்கு Kuwait விசா கிடைத்து விட்டது காரியாலயத்தில் சந்திக்கவும். உடன் பிரயாண ஒழுங்கு செய்யப்படும்.

**GROUP ATLANTIC**
அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A 1385]

# இறைஉணர்வும் கலைஉணர்வும் நல்கும் நவராத்திரி விழா

இவ்வுலகில் தாயன்புக்கு ஒரு தனியிடம் உண்டு அந்த அன்பை ஆத்மீக நிலையில் உயர்த்தி நோக்கும்போது நாம் வணங்கும் தெய்வத்தைத் தாயாகக் காணுகிறோம். அழுந்தொறும் அணைக்கும் அன்னையாய் அறிவிலாது ஆடிஓடி விழுந்தொறும் எடுக்கும் அப்பனாய் விளையாடும்போது தோழனாக எமக்கு விளங்குபவன் இறைவன் அந்த உறவை ஒரு இறுக்கமான பிணைப்பில் காட்டி நிற்பது தாய் வடிவில் அவனைக் காணும்போது கிடைக்கிறது. தாய் ரூபமாகத் தெய்வத்தைக் கூறும் மதம் இந்து சமயம் ஒன்றே. நவராத்திரி தினங்களில் கலைக்கு வடிவம் கொடுத்து வழிபடும் சிறப்பு எமக்கு உண்டு. கலையுணர்வினால் மனிதன் தெய்வ நிலையடைகிறான். அவனுடைய உள்ளம் தூய்மையடைகிறது. இதனாலேயே கலைக்கு ஒரு தெய்வமாக நாமகளை வைத்து வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கச் செய்கிறோம். கலைவிழாக்கள் எடுத்து அவற்றுக்கு எழுச்சி கொடுக்கிறோம். இதனாலே கலாசார உறவும் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

நவராத்திரி விழாவில் பெண்களுக்குப் பெரும்பங்கு உண்டு. தம்மில்லங்கள் தோறும் பொம்மைகளைத் தொகுத்து வைத்து வழிபாடு செய்வதற்கு ஏற்றமுறையில் கொலுவைப்பதும் ஒருவர் மற்றவர்களுடைய இல்லங்கள் தோறும் சென்று கொலு வைத்து தரிசிப்பதும் பெண்களின் நவராத்திரி கால நிகழ்ச்சிகளாகும். ஒரு காலத்தில் ஆண்களிலும் பார்க்கப் பெண்களுக்கு ஓய்வு அதிமிருந்தது. இதனால் அவர்கள் இத்தகைய

## நன்மைக்கும் தீமைக்கும் நிகழும் போராட்டத்தில் அன்னை நன்மையின் பக்கம் நிற்கிறாள்

கலையுணர்வையும் கலாசார உறவையும் பெருக்கிக்கொள்ள நவராத்திரி தினங்களில் பல்வேறு வகைப்பட்ட வழிபாட்டு நெறிகளை மேற்கொண்டனர். தத்தமது இல்லங்களில் பலரையும் அழைத்து உபசரித்து விமரிசையாக இக்காலத்தைக் கழித்தவர்கள் நமது பெண்கள் என்பது வரலாறு கண்ட உண்மை. கலைகளுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் விழா இதுவாகையால் தங்கள் தொழிற் கருவிகளே தமது வாழ்க்கை வளத்துக்கு இன்றியமையாதன ஆகையால் அவற்றுக்குப் பூசை செய்து விழாவெடுத்துப் போற்றினர். இதனால் கலாசாரமும் பண்பாடும் மேன்மையடைய வழிபிறப்பது கண்கூடு. இதனால் வீடுகளும் வேலைத்தலங்களும் தூய்மையும் தெய்வீகமும் அடைகின்றன.

அடுத்து ஆலயங்களில் நடைபெறும் நவராத்திரி விழாக்களைப்பற்றிக் கவனிப்போம். இவை புராண அடிப்படையில் அமைபவை. ஆனால் புராணக் கதைகள் பூதக்கண்ணாடி போன்று நுட்பமான பேருண்மைகளை உணர்த்துவன. அதாவது நன்மைக்கும் தீமைக்கும் இடையில் என்றும் போராட்டமுண்டு என்பதும் முதலிலே தீமைக்கு வெற்றிபோலத் தோன்றினாலும் முடிவிலே நன்மைதான் வெற்றியடையும் என்பதும் இதற்குக் காரணம் நன்மையின் பக்கமாகவே திருவருட்சக்தி தொழிற்படுகிறது என்பதும் நாமறிய வேண்டிய உண்மைகளாகும். புராணங்கள் அனைத்தும் இந்த அடிப்படையிலேயே பேசப்படுகின்றன.

மகிடாசுரன் வரம் பெற்று வலுவான ஆட்சி நடாத்திய பேரரசன். அசுரபலம் அதிகமாக அவனுக்கு இருந்தமைக்கு வரம் பல பெற்றமையே காரணமாகும். அந்த அரக்கனால் தேவர்கள் பெருந் துன்பமடைந்தனர். அன்னை பராசத்தியிடம் முறையிட்டனர். தேவியும் இறைவனை நோக்கி நவசக்தி வடிவமாகத் தவஞ்செய்து நவராத்திரி ஒன்பதாம் இரவில் துர்க்காதேவி வடிவில் மகிடாசுரனை அழிக்கின்றாள். இதனால் மகிழ்ந்த தேவர்கள் பத்தாவது நாளில் வெற்றி விழா வெடுக்கின்றனர். ''விஜய தசமி'' என்று இந்நாளை வெற்றி குறித்துப் போற்றி நிற்கின்றனர். இதனையொட்டியே படை வீரர், தொழிலாளர் இந்நாளில் தமது படைக் கருவிகளையும். தொழிற்கருவிகளையும் அம்பிகை திருமுன் வைத்துப் பூசை செய்யும் வழக்கும்ஏற்பட்டது.

''எடுத்த காரியம் யாவினும் வெற்றி<br>எங்கு நோக்கிலும் வெற்றி<br>விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி''

என்று போற்றுதற்குரிய நாள் இந்த விஜயதசமி நாளாகும்.

நவராத்திரி வழிபாட்டின் மூலம் மக்கள் அடையும் பேறுகளையும் மூன்றாக வகுத்து வீரம், செல்வம், ஞானம் என்று பேசப்படுகிறது. இறைவனது அருளாற்றல் ஒன்றே மூவகையில் பிரிந்து தொழிற்படுவதையும் அவையே துர்க்கை, இலட்சுமி. சரஸ்வதி என்ற நிலையில் வழிபாட்டை ஏற்பதும் நாம் பல காலமாக அறிந்த வழிபாட்டு மரபாகும். கேவலம் லௌகீக உணர்வுக்கும் வாழ்வுக்கும் இம்மூவகைப் பேறுகளையும் பயன்படுத்தாமல் நல்லதைச் செய்வோம் என்ற உறுதிப்பாட்டுடன் வீரமும் எல்லோர்க்கும் உதவி செய்த பரோபகாரிகளாக இருப்போம் என்ற நிலையில் நாம் பெற்ற செல்வமும் அறிவிலே தெளிவு பெற்று நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்போம் என்ற உயர்ந்த குறிக்கோளை வளர்க்கும் அறிவும் இந்நாட்களிலே ஆற்றும் வழிபாட்டினால் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

## நேருவை வென்ற சொல்வல்லார் மத்தாய்

''பிரதமரும், கிருஷ்ண மேனனும், நானும், இளவெயில் எறித்துக்கொண்டிருந்த காலை வேளையில், காஷ்மீரிலுள்ள விருந்தினர் விடுதியின் 'போட்டிக் கோவில்' தங்கியிருந்த போது, நேரு அவர்கள் குறும்புத்தனமான மனோநிலையிலிருந்தார். அவர் கிருஷ்ணமேனனைப் பார்த்து ''மலையாளிகளான உங்களை நாகரிகம் உடையவர்களாக ஆக்குவதற்கு, இங்கே கொண்டுவர வேண்டியிருந்தது'' எனக் கூறினார். கிருஷ்ணமேனனின் முகம் சுருங்கியது. என்னை ஏதும் சொல்லுமாறு அவர் வேண்டிக்கொண்டார். பிரதமரின் காதில் ஒலிக்கக்கூடிய வகையில், கிருஷ்ணமேனனைப் பார்த்துப் பின்வருமாறு நான் கூறினேன். ''சிறீநகர் பள்ளத்தாக்கின் மத்தியில் இருப்பது என்ன என்று ஏன் நீர் பிரதமரைக் கேட்கக் கூடாது? அதுதான் சங்கராச்சரியார் கோயில் காஷ்மீர் மக்களை நாகரிகம் உடையவர்களாக ஆக்குவதற்கு சங்கராச்சாரியார் மிக நெடுந்தொலைவிலிருந்து கால் நடையாக வரவேண்டியிருந்தது. கிருஷ்ணமேனனின் முகம் மலர்ந்து வெற்றிப் பெருமிதத்துடன் விளங்கியது என்று மத்தாய் எழுதியுள்ளார்.

தொகுப்பு:
''கரவைகிழார்''

## பாரதிதாசன் வசன கவிதை எழுதினாரா?



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரோடு சுமார் பத்தாண்டு காலம் பழகியவர் பாவேந்தர் பாரதிதாசன். அவர் எழுதப்படுபவை எளிமையாக இருத்தல்வேண்டும் என்ற பாரதியாரின் கொள்கையைப் பின்பற்றியவர் பாரதியாரின் வாரிசு பாவேந்தர் என்றுகூடக் கூறினார்கள். பாரதியாரைக் காலத்தின் குரல் என்றார்கள் பாரதிதாசனையும் காலத்தின் குரல் என்றார்கள்.

அவ்வாறெல்லாம் கூறப்பட்டபோதும் பாரதிதாசன் பாரதியாரிடமிருந்து இரண்டு விடயங்களில் வேறுபட்டார்.

ஒன்று: பாரதியார் தெய்வ நம்பிக்கை உடையவர் பாரதிதாசன் நாத்தீகர்.

இரண்டு: பாரதியார் வசன கவிதை பாடியுள்ளார். பாரதிதாசன் பாரதியாரோடு பத்தாண்டு பழகியும் ஒருவசன கவிதைதானும் எழுதவில்லை

—சுந்தரம்

# முல்லைத்தீவு மாவட்டம்: இன்றைய நிலையும் எதிர்காலமும்

சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் எனது மூதாதையோரில் ஒருவர் இடைக்காடு கிராமத்திலிருந்து சென்று ஒட்டுசுட்டானில் குடியேறினார். அவர் விவசாயத்திற்கு நிலத்தைப் பண்படுத்தும்பொழுது நிலத்தில் கண்டெடுத்த விக்கிரகத்தை ஒரு கொட்டிலில் வைத்து வணங்கினார். காலப்போக்கில் இது வன்னியின் ஒரு சிறந்த கோவிலாகியது. எனது பதினாறும் வயதில் இக்கோவிலைத் தரிசிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் வற்றாப்பளை அம்மனைத் தரிசிக்கப் பல ஆண்டுகள் காத்திருக்கவேண்டியிருந்தது. நான் வவுனியா அரசாங்க அதிபராய் சென்றபொழுதுதான் முதல் முறை தரிசித்தேன்.

இவ்விரு கோவில்களைவிட இப்பகுதியில் குமாரபுரம்என்ற ஒரு சிறந்த கோவிலும் உண்டு. இவையெல்லாம் தற்போதைய முல்லை மாவட்டத்தில் அடங்கும். நான் அரசாங்க அதிபராய் கடமையாற்றியபொழுது தற்போதைய முல்லை மாவட்டத்தின் பெரும்பகுதியும், தற்போதைய வவுனியா மாவட்டமும் ஒரே மாவட்டமாயிருந்தது. பிரிட்டிஷார் காலத்தில் கச்சேரி முல்லைத்தீவிலே இருந்தது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் குணசேன டீ செய்சா அரசாங்க அதிபராயிருக்கும் பொழுது வவுனியாவில் மக்கள் அக்காலத்தில் மிகவும் பிற்போக்காய் இருந்தார்களென்றும் முக்கியமாகச் சிங்கள மக்கள் என்றும் கச்சேரியை வவுனியாவுக்கு மாற்றினால் இவர்களுக்குப் பலன் அளிக்குமென்றும் கூறி அரசை வற்புறுத்த அரசாங்கமும் இணங்கிற்று. இதுவே கச்சேரி வவுனியாவுக்கு மாறியதன் காரணம். சமீபத்தில் முல்லைத்தீவு மக்கள் வவுனியா கச்சேரி மிகவும் தூரமென்றும் தங்களுக்கே ஒரு மாவட்டம் வேண்டுமென்று கேட்க அரசு பழைய வவுனியா மாவட்டத்தைத் துண்டுபோட்டு இரண்டாக்கிற்று.

### முல்லை மாவட்டமும் வவுனியா மாவட்டமும்

வவுனியா மாவட்டத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளையும் யாழ். மாவட்டத்துத் துணுக்காயையும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை ஒரு பகுதியையும் பனங்காமத்தையும் சேர்த்து முல்லை மாவட்டமாகியது. பழைய வவுனியா மாவட்டத்தின் தெற்கு, மேற்குப் பகுதிகளையும்சேர்த்து புது வவுனியா மாவட்டமாகியது. இந்தப் பிரிவால் மக்களுக்குக் கூடிய பலன் உண்டா இல்லையாவென்று எதிர்காலம் தான் கூறும்.

தற்போதைய முல்லை மாவட்டத்தில் பனங்காமம் பகுதியில் மிகவும் பழமைவாய்ந்த வவனிக்குளம் இருக்கிறது. கி.மு ஆறும் நூற்றாண்டில் இது இருந்ததாகக் குள நிபுணர் ஆறுமுகம் எனக்குக் கூறியது ஞாபகத்துக்கு வருகிறது, இங்கே குளத்தைத் திருத்திய பொழுது கண்டெடுக்கப்பட்ட விக்கிரகத்தை முறையாக ஒரு கோவில் எழுப்பிச் சிவாலயம் என்று நாமமிட்டு மக்கள் வணங்கி வருகிறார்கள்.

### குளக்கோட்டானும் பண்டாரவன்னியனும்

பழைய பெருமைகளை மட்டுமே பேசுபவர்கள், எழுதுபவர்கள் தங்களையும் ஏமாற்றி மற்றவர்களையும் ஏமாற்றிக் காலத்தை வீணாக்குபவர்கள் என்பது எனது கருத்து. ஆனால் பழைய பெருமைகளைக் கூறி இதனால் உற்சாகம் ஊட்டி மக்களை எதிர்காலத்தில் ஆக்கபூர்வக் கடமைகளில் ஈடுபடச் செய்பவர்களே மக்களுக்கு உண்மைச் சேவை செய்பவர்கள். இவையெல்லாம் ஏன் இவ்விடத்தில் கூறுவதென்றால் முல்லையில் கடமையாற்றினால் குளக்கோட்டானின் செயல்களாலும், பண்டாரவன்னியனின் சிறப்புக்களாலும் உற்சாகப்படாமலிருக்க முடியாதென்பதைக் கூறுவதற்கே. சோழநாட்டுக் கரிகாலனைப்போல் குளக்கோட்டானும் நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுத்து வெற்றிகண்டான். வேறுதிசையில் பண்டாரவன்னியன் வீரத்திற்கு அத்திவாரமிட்டான், முல்லையில் எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் இவ்விரு வீரர்களைப் பற்றி கூறாதவர்கள் கிடையாது. பண்டாரவன்னியனின் உருவச்சிலை வவுனியா பட்டினத்தில் மக்களுகக்கு உற்சாகம் ஊட்டிக்கொண்டிருக்கிறது. காவிரி அணைக்கட்டில் எப்படிக் கரிகாலன் குதிரைமேல் வீற்றிருந்து காட்சி கொடுக்கின்றானோ அதேபோல் முத்து ஐயன் குளக்கட்டில் குளக்கோட்டானுக்கு ஒரு சிலை நிறுவி அவன் காட்சி கொடுத்தால் எங்களுக்கு உற்சாகம் ஊட்டுவதுடன் இவ்வரசன் செய்த பெரும்பணிகளுக்கு எங்கள் கைமாறுமாயுமிருக்கும்.

### வளம் மலிந்த முல்லை மாவட்டம்

நில்வளம், நீர்வளம் சடல் வளம் நிறைந்த மாவட்டம் முல்லைத்தீவு. பொதுவாக மழைவீழ்ச்சி போதியதாகவிருக்கும் மாவட்டம் முல்லை. குளநிபுணர் ஆறுமுகம் வங்காள விரிகுடா மழைவீழ்ச்சியின் நாக்குநுனி நெடுங்கேணியிலிருக்கிறதென்று அடிக்கடி கூறுவார். உலக மழை வீழ்ச்சி சாதனையில் சுமார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் நெடுங்கேணியில் பெய்த மழைக்கு ஒரு இடமுண்டு அப்பொழுது சுமார் ஐம்பது குளங்கள் முறித்தனவென்று அறிந்தேன். இப்படிப் போதிய நீர் வளம் பொருந்திய பகுதியில் நெற்பயிரும், மறு பயிரும் சிறப்பாக வளரும். நெற்பயிர் விவசாயம் இப்பகுதியில் பல நூற்றாண்டுகளாக நிலவி வருகிறது. மறு தானியங்கள் முத்து ஐயன் திட்டத்தில் எனது நண்பன் விவசாய நிபுணர் கனகரெத்தினத்தின் விடாமுயற்சியால் இருபது ஆண்டுகளுக்குமுன் பிரபல்யம் அடைந்தது. தொடர்ந்தும் இந்த விவசாயம் எல்லாப் பகுதிகளிலும் சிறப்பாக நடைபெறுகிறது. கலவரமில்லாத காலங்களில் முல்லைத்தீவு மீன் மிகத்தொகையாகத் தெற்கே அனுப்பி வந்தார்கள் இதெல்லாம் பார்க்குமிடத்து நல்ல சூழ்நிலை திரும்ப வரவும் ஒரு நல்ல எதிர்காலம் முல்லைக்குக்

[8ம் பக்கம் பார்க்க]

நா மாணிக்க இடைக்காடர்

# வரலாற்றுப் பெருமைமிக்க வல்லிபுர ஆலயம்

## முருகவே. பரமநாதன்

“ஈழத்துக் கோயில்களின் வரலாறுகளை ஒன்றாகத்திரட்டி நோக்கினால், அது எங்கள் நாட்டுத் தமிழ்மக்களுடைய விரிவான பண்பாட்டு வரலாறாக அமையும். ஈழத்துத் தமிழ் மக்களுடைய வாழ்வினையும் வளத்தினையும் அது நமக்குத் தெரிவிக்கும்” என்பது கலாநிதி அ. சண்முகதாஸின் கருத்தாகும்.

நமக்கென்றுள்ள தொன்மையான பாரம்பரியங்கள், மரபுகள் சிறப்பாக இந்துக்களின் வாழ்வையும், வளர்ச்சியையும் பண்பையும், நாகரிகத்தையும் பற்றி எழுதுவதற்கு இத்தரவுகள் இன்றியமையாமையை, கலாநிதி சு. வித்தியானந்தன் வல்லிபுரம் ஆழ்வார்சுவாமி ஆலயத்தின் பூர்வீக வரலாறு கூறும் ‘ஆழ்கடலான்’ என்னும் ஆய்வு நூலுக்கு நல்கிய ஆசியுரையில்,

“ஈழத்துத் தமிழர்களின் பண்பாட்டிலே சமயம் சார்ந்த உணர்வுகளும் நம்பிக்கைகளும் மிகமுக்கிய பங்கை வகிக்கின்றன. அவற்றின் நிலைக்களனாகத் திகழ்பவை ஆலயங்கள். இக்காரணத்தால் ஈழத்துத் தமிழர் பண்பாட்டைக் கற்றறிய முயல்பவர்கள் ஆலயங்களையும் அவற்றோடொட்டிய வாழ்க்கை முறைகளையும் கற்றல் அவசியமாகின்றது” எனக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மிகப்பழைய வழிபாட்டுத் தலங்களில் ஒன்று வல்லிபுரத்திலமைந்துள்ள ஆலயம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆதியிலே பதினைந்து நாட்களே உற்சவகாலமாய் இருந்து பின்னர் பதினாறு நாட்களாகி இப்போது பதினேழு நாட்கள் திருவிழா நடைபெற்று வருகிறது. திருமாலுக்குக் கொடியேற்று வைபவம் நடைபெறுமுன்னே வல்லிபுரம் குருக்கட்டுச் சித்திவிநாயகருக்குக் கொடியேற்றுவிழா நடைபெறும். இது கொடிக்கவி பேசும் வாயிற் கொடியேற்று விழாவாகும். நான்கு தினங்களுக்கு முன்னதாக இடம்பெறும். விநாயகருடைய கொடியேற்ற விழாவை முன்னின்று செய்பவர்கள் வல்லிபுரக்கோயிற் பிரதம குருவாயிருப்பார்.

அன்று மாலை ஆழ்வாராலயத்திலுள்ள விநாயகரை மங்கள வாத்தியங்கள் முழங்க, சோடசோபசாரங்களுடன் கொண்டுவந்து-குருக்கட்டில்வைக்கப்படும் தொடர்ந்துமுத்தினங்கள்விநாயகருக்கு விழாவெடுத்துப் பூசை நடைபெறும் இவ்வாறு மூன்றுநாட்கள் விழா நடைபெற்று, மூன்றாம்நாள் மீண்டும் விநாயகப் பெருமானை ஆழ்வார்சுவாமி ஆலயத்துக்குக் கொண்டு சென்றபின் அடுத்தநாள்கொடியேற்றுவிழா நடைபெறும். கொடியேறி எட்டாம்நாள் ஆழ்வார் குருக்கட்டுக்கு எழுந்தருளுவது பண்டைய பாரம்பரியமாகும். இப்பாரம்பரியக் கட்டுப்பாடு கோயில்களை ஸ்தாபித்து, அர்ச்சகர்களாயும் - நிர்வாகிகளாயுமிருந்த வல்லிபுரத்தில் குடிபதிகளாய் வாழும் மக்களின் மூதாதையர் ஏற்படுத்திய மரபாகும்.

இவ்வாறே ஆழ்வார் சுவாமி ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை வழங்குவதிலும் பண்டைய மரபொன்று இன்றும் கைக்கொள்ளப் படுவதைக் காணலாம். யாழ்ப்பாண இராச்சியத்தின் மூத்த தலைநகர்தான் கந்தரோடை என்னும் கதிரமலையாகும். இங்கேயுள்ள (சுன்னாகத்தில்) கதிரமலைச் சிவன்கோயிலுக்குப் புராதன வரலாறொன்றுண்டு. கந்தரோடையின் பின்னர் நெடுங்காலமாகச் சிங்கைநகர் தலைப்பட்டினமாயிருந்தது. இது வல்லிபுரம் எனப்பலரால் நிச்சயிக்கப்பட்டு விட்டது.

நெய்தலும் மருதமும் சங்கமமாகி, வங்கக்கடலோசையின் ஆர்ப்பெல்லையின் மேற்கே அமைந்திருப்பதுதான் வல்லிபுரம். இங்கேதான் விஷ்ணு ஆலயமிருக்கிறது. “பொங்கொலிநீர் சிங்கைநகர்” எனக் கல்வெட்டில் கூறப்படும் சிங்கைநகர் ஒரு தொல்பொருட் களஞ்சியமாகும். இதற்குச் சிங்கை, சிங்கபுரம் என்றும் பெயர். ஆரியர் இதைத் தலைப்பட்டினமாகக் கொண்டு ஆண்டமையால் சிங்கையாரியரென வரலாற்றில் இடம்பெற்றனர். படையெடுப்புக்களால் சிங்கை மறைந்ததும் நல்லூர் தலைநகராயிற்று. கோமளவல்லிபுரம் (கோவளம் சென்னை) இராஜவல்லிபுரம் (செப்பறை) வல்லீபுரம் [செங்கற்பட்டு ஜில்லா] என்னும் சிறப்புப் பெயர்களுடைய இடங்கள் தமிழகத்தில் இருப்பதுபோல யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம் என்ற கிராமம் தொன்மையானது. கிராமத்தின் பெயரால் ஆலயம் வல்லிபுரக் கோயிலென வழங்கப்படுகிறது.

நல்லூர் தலைநகரான காலத்தில் அங்கெழுந்த ஆலய உற்சவத்துக்கான கொடிச்சீலையை வழங்கிய மரபினரே வல்லிபுரம் ஆழ்வார் சுவாமிக்கும் கொடிச்சீலை அறியாக் காலந்தொட்டு வழங்கி வருகிறார்கள். இவர்கள் வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையிலுள்ள கரவெட்டி கிழக்கின் தொல்குடி மக்களாகும்.

மிகப் பழைய காலத்தில் பெருவிழா நடைபெறுமுன் கோயில பொறுப்பாளர், ஒருவர் மூலம் முன்னறிவித்தல் கொடுப்பார். துவசவஸ்திரம் வெண்மையானது. ஆகம விதிப்படி 24 முழம் கொண்டிருக்கும். கொடிச்சீலையுடன் முப்புரியுடன் கூடிய கொடிக்கயிறும் இணைந்திருக்கும். கொடியின் மேற்றொங்கலில் அஷ்டமங்கலம், சூரியன், சந்திரன், சங்கு, சக்கரம், திருவாசி பெரிய திருவடியின் ஓவியங்கள் செங்காவியில் தீட்டப்பட்டிருக்கும்.

இக்கொடிச்சீலை வழமைபோல உரிமையகளர்களில் பொறுப்பான ஒருவர் இல்லத்தில் இருந்தே எடுத்துச்செல்லப்படும் நிறைகுடம்வைத்து, பிள்ளையார் பூஜை செய்து, கர்ப்பூர நீராஞ்சனம் செய்து, மலர் தூவி, தமிழில் திருமறையோதி, சுவாமிக்கான பட்டுக்களுடன் அர்ச்சனைக்கான பொருள்களுடன் மலரும் சேர்த்து, வட்டமான தாம்பாளத்தில் வைத்து வேண்டிய ஆராதனை முடிந்ததும் [கொடியேற்றத் தினத்தன்று காலை] மேளதாளங்களுடன் [மங்கள வாத்தியம் ஆலயத்திலிருந்து வரும்] தலைமேற் சுமந்து கொண்டு கலிகைச்சந்தி மூலம் வல்லிபுரக்குறிச்சியூடாக அடியார்கள் புடைசூழ கோவிந்த நாமசங்கீர்த்தனத்துடன்எடுத்துச் செல்லப்படும். கோயில் திருமுற்றத்தில் வந்து பிரதம குருவின் வரவேற்புடன் மங்களமும் மணிகளுமொலிக்கப் பவ்வியமாய்ப் பொறுப்புக் கொடுக்கும் இம்மரபு முறை சிங்கை நகராட்சியோடு தொடர்புடையதோ என்பது ஆய்வுக்குரியதாகும். இக்கொடிச்சீலை வழங்குவோர் வாழும் பகுதியில் “வல்லியா[ர்]வளவு” “வினைதீர்த்த வல்லியார்” என வழங்கும் தோம்புப்பெயர்கள் கூட ஆய்வுக்குரியனவே.

## “பண்டிதர் பரமசிவம்:”

### ஒரு வாசகர் எழுதுகிறார்

21-9-86 ஈழநாடு வாரமலரில் பண்டிதர் பரமசிவம் சிவபதமடைந்த ‘காதை’யைக் கண்ணீருடன் படித்தோம்.

பல பயனுள்ள சிந்தனைகளைச் சுவைபட பண்டிதர் பரமசிவம் வாயிலாக திரு. சண்முகசுந்தரம் அவர்கள் தந்தார்கள். அதனை ஆவலுடன் படித்து வந்தோம். பரசிவத்தின் துணைவியார் இறையடி சேர்ந்த அம்சத்துடன் நின்றபோது பரமசிவத்தின் முடிவும் அம்சத்தில் இடம்பெற்றிருக்க வேண்டுமே என்று எண்ணியபோது புகழ்பூத்த எழுத்தாற்றல்மிக்க அவர்கள் முடிந்தவிதம் சரியாகத்தானே இருக்கும் என்று முடிவு கட்டிவிட்ட எம்மை எதிர்பாராதவிதமாகக் கலங்க வைத்துள்ளது.

ஈழநாட்டில் திரு. சண்முகசுந்தரம் அவர்களைக் காண்பதே கிடையாது. அவர்கள் மேல் உள்ள அன்பு அவர்களைத் தெரிந்தவர்களிடம் விசாரிக்க வைத்தது. விசாரித்த அதே வாரம் சுகவீனமுற்று வைத்தியசாலையில் இருப்பதாக ‘ஈழநாடு’ மூலம் அறிந்தோம். அதனைத் தொடர்ந்து அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அவர்கள் இறையடி சேர்ந்ததை அவர்களது ஈமக்கிரியையும் முடிதந்தை அறிந்து உள்ளம் பதறி வருந்தியது.

‘ஈழநாடு’ தந்த அன்புக்குரியவர்களை இழந்தால் அவர்கள் பற்றிய அம்சங்களைப் படிப்பதன் மூலம்தான் உள்ளம் ஆறுதலடையும். அந்தவகையில் ஈழநாடு தந்த ஆறுதல் போதாது. துயர உள்ளத்துடனேயே இருந்தோம். அச்சமயம் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் தமது அன்புக்கரத்தால் எழுதிய அம்சத்தினை ‘ஈழநாடு’ தந்து எம்மை நிலைகுலைந்து அழத்தான் வைத்து விட்டது. பரமசிவம் அல்ல எமது பேரன்புக்குரிய திரு. சண்முகசுந்தரம் அவர்களே சிவபதம் அடைந்த கதையென உள்ளத்திற்கு உள்ளது. உள்ளம் வருந்திக்கொண்டே உள்ளது. கண்ணீர் பாய்ந்து கொண்டே உள்ளது.

செல்வி ஆ. செல்வநாயகி
உரும்பராய்.

## தினமும் அதுவே வகை செய்யும்

பாலர் நாங்கள் கூடுவோம்
பந்தடித்தே ஆடுவோம்
காலம் அறிந்து ஆடுவோம்
கருத்து ஒன்றி ஆடுவோம்
நாளும் மாலையில் ஆடியே
நன்றாய்ப் பயிற்சி தான்
செய்வோம்
வேலை தப்பாப் பயிற்சியால்
வெல்லும் உடலைத் தான்
பெறலாம்
உடலின் வலிமை உறுதிசெய்ய
உள்ளம் வலிமை தானெய்தும்
திடமாய்க் கல்வியிற் கருத்
தூன்ற
தினமும்அதுவே வகைசெய்யும்

—வட்டூர் என். கடம்பன்

## புதிதாக வீடு கட்டுவதற்கு புதுமையான சிந்தனைகள்

### திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

கலவரங்கட்கு எல்லாம் முதல் காரணம் மனையில் இருந்துதான் தொடங்குகிறது.

ஐந்து வீடாவது பாண்டவர்கட்குக் கிடைத்திருந்தால் பாரதப்போர் நடந்திருக்க மாட்டாது. முதல் பிரிவினை தாய் வீட்டில் இருந்துதான் பிறக்கின்றது. ஆகவே நிம்மதியை விரும்புவோர் எல்லாம் புதுமையான வீட்டினை அமைக்கவேண்டும். இதுவே எனது சிந்தனையின் அடிநாதம்!

வீடு குடிசையாக இருக்கலாம்; ஆனால் அதிலே நுழையும்போது இந்திரபுரியை அங்கு வரவழைக்கலாம். விதுரரின் குடிசையில் ‘பார்த்தன்’ நுழைந்தபோது அது இலக்கிய வரலாறு ஆனது. முனிபுங்கவர்கள் வாழ்ந்த பன்னையடிச்சாலைகள் மனை அமைப்பதில் தமிழர்கட்கு இருந்த அபூர்வ ஆற்றலை விளங்கப்படுத்துகின்றது.

இலட்சக்கணக்கான செலவில் திட்டம் போட்டு வீட்டினைக்கட்டி, அன்றாட உணவிற்குக் கடன் வாங்கப் போகக் கூடாது! மாடிவீடு கட்டிப் ‘பொம்பருக்கு’ இரை கொடுத்து அனாதைகளாக அலைவதைவிடச் சிறுகக்கட்டிப் பெருக வாழ்வது மிகச் சிறந்தது.

பெரியவீடு கட்டுவோம்; ஆனால் விருந்தினர் வந்தால் உபசரிக்க ஒரு ‘தனிஅறை’ அந்த வீட்டில் இருக்காது. சிந்தனையில் எமக்கு ஏற்பட்ட வறுமை நிலைதான் இது

மாடிவீடு இருக்கும்; தாயோ கீழ்வீட்டில் — பெற்ற பிள்ளையோ மேல்வீட்டில்! பாசத்தைப் பிரிக்கும் இவ்வாறானபல மாடி வீடுகள் பல இடங்களிலே உண்டு.

வீடு கட்டியவரின் சிந்தனையிலே ஏற்பட்ட விழுக்காடு தான் இது! தகப்பன் கட்டிய வீட்டைப் பிள்ளைகள் பல துண்டுகளாக அவர் இறப்பதற்கு முன்பே பங்கு போடுவார்கள். அந்தக் கவலையிலேயே பெற்றவன் இறந்துவிடுவான்! முக்காலத்தையும் கணிக்காத வீட்டுச் சிந்தனைகளே இந்த நிலைமையை அவருக்கு ஏற்படுத்திக்கொடுத்தது.

வீடு......பெரிதாக இருக்கும். அந்தக் குடும்பத்தில் ஒருவரை இன்னொருவர்க்குப் பிடியாதபோது அந்த வீட்டிலேயே மறைந்துவாழ வசதியிராது. கட்டிடக்கலைச் சிந்தனையில் எமக்கு ஏற்பட்ட குறையே இது!

வீடோ பெரிதாக இருக்கும். எட்டுமணிக்கு எழும்பும் எஜமானனுக்கும், எஜமாட்டிக்குமிடையே முற்றத்தைக் கூட்டிப்பெருக்க முன்பு அடிதடி பிறக்கும். எஜமான் வீட்டைவிட்டு வெளியேறுவார். முற்றத்தைக் கூட்ட வேலையாள் தேவைப்படும்! ஆனால் அப்படி வைத்திருக்க எஜமாட்டியிடம் வசதியிராது. இப்படிப் பலவீடுகள்.

வசதியான வீடு: ஆனால் எஜமானே வீட்டிலிருந்து வெளியேறி அயல்வீட்டில் கதைத்துக்கொண்டிருப்பார்! வீடு அமைத்ததில் இருந்த கோளாறே அவரை வீட்டில் இருந்து வெளியேற்றி இருக்கின்றது.

மஞ்சளையும், குங்குமத்தையும் மகத்தான நிறங்களாக தமிழன் தெரிந்துவைத்திருந்தான். கிருமி அழிப்பதற்கு மஞ்சளைத் தெளித்தான். மங்கலமான நாளில் மஞ்சளில் தாலி கட்டினான்; துறவறம் பூணும்போதும் மஞ்சள் துணியுடன் வெளியேறினான். ஏற்பைக் குணமாக்கும் மஞ்சளை மரமஞ்சள் என வித்தியாசப் படுத்தினான். அது மாத்திரம் அல்ல இறைவனுக்கு அர்ச்சிக்கும் பூக்களில் பெரும்பாலானவற்றை மஞ்சளிலும், வெள்ளையிலும் கண்டான். இந்தத் தத்துவத்தை எமது மனையிலே காணாமல் இருப்பதால்தான் இன்று பலருக்கு உள்வீட்டிலேயே சித்தசுவாதீனம் பிடித்துக்கொள்கிறது. அதன் காரணத்தைத் தெரிந்தோர் சிலரே.

மஞ்சளும் ,சிவப்பும் மங்கலமானது மஞ்சளும் கறுப்பும் கலக்கும்போது அது அமங்கலமாகிவிடுகின்றது. பாலுக்குள் விஷத்தை விடும்போது பால் தனது தனித்தன்மையை இழந்துவிடுகின்றது. (வளரும்)

## நாவலர் சரித்திர அநுபந்தம்

ஆறுமுகநாவலரின் பெருமகனும் சீடருமாகிய சு. கைலாசபிள்ளையவர்கள் எழுதிய “ஆறுமுகநாவலர் சரித்திரம்” நூல் வெளிவந்து எழுபது வருடங்களாகிவிட்டன. எனினும் அந்நூலின் அநுபந்தத்தில் மறுபிரசுரம் செய்யப்பட்டிருந்த “உவெஸ்லியன் மெதடிஸ்த மிஷன் சபையின் 1855ம் ஆண்டறிக்கை”யின் 20ம் பக்கப் பந்தியில் முதல் மூன்று வசனங்களிலுமிருந்த பதினொரு சொற்கள் இன்று வரையில் நிரப்பப்படாமலேயே இருந்துவருகின்றன,

இப்பொழுது யாழ். மத்திய கல்லூரி நூலகர் திரு கா. மாணிக்கவாசகரின் முயற்சியால் இவ்விடைவெளிகள் நிரப்பப்படுகின்றன. இந்நூலை வைத்திருப்போர் இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் மூலப்பிரதியில் பெரிய எழுத்தில் இருக்கும் சொற்களைத் தமது நூலிற் பிரதி செய்து பந்தியை நிறைவாக்கிக்கொள்ளலாம்.

The most remarkable event of the year has been the publication in Tamil of a work of extraordinary literary and MYTHOLOGIC MERIT-the Siva Dhushana Parikarum. It is APOLOGETIC of sivism and antagonist to CHRISTIANITY IT POSSESSES the peculiarity of forsaking the old POINTS OF DEFENCE and attack, and adopting an entirely new and different strategy.

## கெரில்லா தலைவன்

இந்தியாவின் மிசோராமின் மாநில முதல் மந்திரி லால்டெங்கா முன்னர் இராணுவத்தில் பணியாற்றியவர். பின்னர் தேசநலனுக்காக இராணுவத்தை விட்டு விலகி, மிசோராமின் கிளர்ச்சித் தலைவரானார். இருபது வருட போராட்டத்தின் பின், செரில்லா முறையைக்கைவிட்டு குடியாட்சி முறையை ஏற்றுள்ளார். எல்லை மாகாணமான மிசோராமில் அமைதி நிலவ பிரதமர் ராஜீவ் இவரை முதல் மந்திரி ஆக்கி சமாதானத்தை நிலைநாட்டியுள்ளார்.

—ஸச்சி

# அறிவும் அனுபவமும்

## புலவர் சிவானந்தன் பதில்கள்

கேள்வி: சொற் பொழிவுத் துறைக்குத் தாங்கள் செய்த பங்களிப்பை அறியலாமா?

பதில்; வளரும் சொற் பொழிவாளருக்காக அடிகளார் பாதையிலே, சீதனக் கொடுமை ஒழிக என்னும் இரண்டு சொற்பொழிவு நூல்களைப் பலஆண்டுகளுக்குமுன்பு வெளியிட்டுள்ளேன். ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள் என்னும் நூலை எழுதி ஈழத்தில் தலைசிறந்த தமிழ்ப் பேச்சாளர் எப்படித் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்துகிறார்கள் என்று காட்டியுள்ளேன். சொற்பொழிவுத்துறையில் இதுவே தமிழில் முதல் முயற்சி என்று முன்னைநாள் ஈழநாடு ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் இந்நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். ஈழத்துச் சொற்பொழிவுகள் என்னும் எனது தொகுப்பு நூல் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டில் வெளியிடப் பட்டுள்ளது.

கேள்வி: அண்மையில் மலேசியா சிங்கப்பூரில் சொற்பொழிவுகளுக்காகச் சென்று திரும்பிய அனுபவங்களைக் கூறுவீர்களா?

பதில்: மலேசியா, சிங்கப்பூர் சொற்பொழிவுகள் திருப்திகரமாய் அமைந்தன. மலேசியாவில் மலாக்கா, யோகூர், நெகிரிசிம்ளான், ரெங்கானு, பகாங் ஆகிய மாநிலங்களிலும், சிங்கப்பூரில் ஐந்து நிகழ்ச்சிகளிலும் சிங்கப்பூர் வானொலியில் இரண்டு சொற்பொழிவுகளுமாக எனது உரையரங்கங்கள் அமைந்தன. எனது ஒருமணி நேரச் சொற்பொழிவை மலேசியாவில் வீடியோ படம் எடுத்து விற்பனை செய்கிறார்கள். மூன்று சொற்பொழிவு நாடாக்களும் அங்கு வெளியாகியுள்ளன.

கேள்வி: மலேசியத் தமிழர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது?

பதில்: மலேசியாவில் தமிழ் மக்கள் இந்தியத் தமிழர்களென்றும், ஈழத்துத் தமிழர்களென்றும் இரு பிரிவினர் வாழ்கிறார்கள், கோவில் வழிபாடு திருப்பணிகள் முதலியவற்றைச் செய்வதிலும், இலக்கியத் துறையை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்தியாவிலுள்ள இந்தியத் தமிழர்களைவிடவும், ஈழத்தில் உள்ளஈழத்துத்தமிழர்களைவிடவும் பொருளாதாரத்திலும் வாழ்க்கை நிலையிலும் மலேசியத் தமிழர் உயர்ந்து நிற்கிறார்கள். சீன, மலாய்க்காரர் இனங்களில் கல்யாணம்செய்து வாழும் தமிழர்களும் உண்டு,

கேள்வி: மலேசியாவின் பொருளாதாரம் எப்படி இருக்கிறது?

பதில்: இரும்பு, ஈயம், நிலக்கரி, செம்பனை, பால்மரம், கொக்கோ முதலியவற்றால் மலேசியா பொருளாதாரத்தில் தன்நிறைவு கொண்டு மேம்பட்டு நிற்கிறது.

கேள்வி: மலேசியப் பயணத்தில் தங்களால் மறக்கமுடியாதவை?

பதில்: மலேசியாவிற்கு என்னை அழைத்துச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்த தந்த எங்கள் ஊர்த்தம்பி ஸ்தபதி சோம. ஆர் தாசுரையும் எனது மலேசியப் பயணத்தைப் பாராட்டி கடிதம் எழுதியதோடு தன்னுடைய மணிவிழா வெளியீடான 'திருவருள் சிந்தனை' என்னும் பைபிள் போன்ற நூலை அனுப்பி வாழ்த்துத் தெரிவித்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரையும்; எனது சொற்பொழிவுகளுக்குப் பின்பு பாராட்டு விழா வைத்துத் தங்கப் பதக்கம் சூட்டித் ''தமிழ்த் தென்றல்'' என்ற பட்டம் அளித்த மலேசியா இந்து சங்கத்தையும், மூவார் முத்து மாரியம்மன் கோவில் நிர்வாகிகளையும் எனது முழுநீளப் பேட்டியை வெளியிட்டு ஆதரவு தந்த தமிழ்நேசன் நாளிதழையும் என்னால் மறக்கவே முடியாது.

கேள்வி: சிறந்த சொற்பொழிவாளனாய் வருவதற்கு என்ன செய்யவேண்டும்?

பதில்: செந்தமிழும் நாப் பழக்கம் என்பார்களே அது போல் நிறைய வாசித்து, யோசித்து, பேசிப்பேசி வளர வேண்டும் தொடக்கத்தில் சிறந்த சொற்பொழிவுகளைப் பாடமாக்கிப்பேசவேண்டும். சிறந்த பேச்சாளர்கள் எப்படி நேரத்தை, மக்கள்கூட்டத்தை அனுசரித்து, பேச்சின் பொருளை ஒழுங்காக்கிச் சொற்களை விழுங்காமலும் சிதைக்காமலும் மேடையில் நின்று ஆடாமலும் கண்களை உருட்டாமலும் அங்கசேட்டைகள் செய்யாமலும் கேட்போர், பேசுவோர் என்ற பேதத்தை அகற்றி ஒருமைப்பாட்டை உண்டாக்கி வெற்றி பெறுகிறார்கள் என்று கவனிக்க வேண்டும், ஒவ்வொரு நாளும் குறைந்தது பத்துப் பக்கங்களையாவது வாசிக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் சொற்பஞ்சம் நீங்க இதுவே வழி.

கேள்வி: சொற்பொழிவுகளால் நாட்டுக்குப் பயன் உண்டா?

பதில்: ஏன் இல்லை? பொருள்



பொதிந்த சொற்பொழிவுகளால் நாட்டு மக்கள் நல்லவற்றைத் தெரிந்துவாழ முற்படுகிறார்கள். மக்களை நல்வழிப்படுத்தும் ஆற்றல் சொற்பொழிவுகளுக்கு உண்டு. ''விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்'' என்பது குறளல்லவா?

கேள்வி; மலேசிய மக்களில் எந்த இனமக்கள் உழைப்பாளர்களாய், முயற்சியாளர்களாய் இருக்கிறார்கள்?

பதில்; சீன மக்கள் தான். அங்குள்ள சீனரைச் சிற்றெறும்புகளோடு ஒப்பிடலாம். எம்பொழுதும் இரவும் பகலும் ஓடியோடி உழைக்கிறார்கள். தொண்ணூறு வயதிலும் எதையாவது சம்பாதிக்க வேண்டுமென்று துடிக்கிறார்கள். அறுபத்தைந்து வயதுடைய சீனக் கிழவிகள் ஒரு இந்துக்கோயிலில் கொத்தனார் வேலை செய்து கவருடைத்துக் கல்லடித்துக் கட்டிடம் கட்டியதைப் பார்த்துத் திகைத்துப்போனேன்.

கேள்வி: சிங்கப்பூரைப் பற்றி......?

பதில்: சுதந்திரம் பெற்ற இருபத்தோராவது ஆண்டை எட்டிப்பிடித்துள்ளது. சிங்கப்பூர். சிங்கப்பூரை ஒரு தொழில் மையமாகவும், சேவைத்துறை நிலையமாகவும் உருவாக்கும் பணியிலும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் முயற்சியிலும் சிங்கப்பூரார்கள் முனைந்து பாடுபடுகிறார்கள், கடமை, கட்டொழுங்கு, கடும்உழைப்பு ஆகியவை சிங்கப்பூரார்களின் உடன்பிறப்பு. சிங்கப்பூரை ஒரு குட்டிச் சுவர்க்கம் என்றும் கூறலாம்.

—முரளி

---

# குழந்தையின் கற்பனை வாய்மையின் இடத்ததே

வேதம் தொடங்கும் போது 'சத்யம் வத்' என்று கூறுகிறது. கடவுள் சத்திய வடிவினர் என்று சமயங்கள் பேசுகின்றன. ஆனால், நாளாந்த வாழ்வில் 'பொய் பேசும்' பலரை நாம் அடிக்கடி சந்திக்க நேருகிறது. முக்கியமாக எமது குழந்தைகள் பொய்பேசும்போது நாம் ஆத்திரப்படுகிறோம்.

இன்னும் இரண்டு வயதை அடையாத குழந்தை பல விடயங்களைத் தவறாகக் கூறும். இவை பொய் என்று கருதப் படுவதில்லை. பெரியவர்கள் பேசுவதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமை, தனது எண்ணத்தைச் சரியாக வெளியிட நுண்மதி வளர்ச்சி போதாமை அல்லது தனது எண்ணங்களை வெளியிடக்கூடிய அளவு சொல்வளம் இல்லாமை காரணமாக இத்தவறு பெரும்பாலும் ஏற்படும்.

வீட்டின் முன்புறம் இருந்து விளையாடும் ஒன்றரை வயதுக் குழந்தையைப் பார்த்து, உங்கடை அம்மா என்ன செய்கிறா?' என்று ஒருவர் கேட்கிறார். குழந்தை ''அம்மா ஓ...'' என்று சொல்லிக் கையை விரிக்கிறது. 'அம்மா இல்லை'என்பதுதான்பொருள். குழந்தைக்கு ஒருவேளை அவரது கேள்வி விளங்கவில்லை. அல்லது 'என்ன செய்கிறார்' என்பதைக் கூறமுடியவில்லை. அல்லது 'என்ன செய்கிறார்' என்பதைக் கூறமுடியவில்லை. ஆகவே இது 'பொய்' அல்ல.

இரண்டு வயதிற்கும் நாலு வயதிற்கும் இடைப்பட்ட பருவத்தில் குழந்தை வேடிக்கையாய்ப்பொய்பேசும் இக்காலத்தில் அவர்கள் ஒரு கற்பனை உ கில் வாழ்கிறார்கள். தமது கற்பனையில் உருவான பல விடயங்களை உண்மையாக நடந்ததாய் அவர்கள் கூறுவர்.

தாய் கீரைக்கறியும் சோறும் கொண்டு வருவாள்.

''கீரைக்கறி தாறன் சாப்பிடு...''

''வேணும்... போ...''

''ஏன் வேண்டாம்?''

''கீரை சொன்னது... சாப்பிட வேணுமெண்டு...''

தாயை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இக்குழந்தை இதைக்கூறவில்லை, இது அந்தக் குழந்தை செய்த கற்பனையின் ஒரு வெளிப்பாடு. இத்தகைய சந்தர்ப்பங்களில், குழந்தையைப் பார்த்து, ''உண்மையாகக் கீரை எழுந்து வந்து அப்படிக் கூறியதா, அல்லது கீரை அப்படிச் சொல்லும் என்று நீ நினைத்தாயா?'' என்று கேட்டால். குழந்தை அது கற்பனையே என்பதை ஒப்புக்கொள்ளும். இதைப் 'பொய்' என்று கூறி ஒரு போதும் தண்டனை வழங்கக்கூடாது. ஆயினும் இந்தப் பருவத்தில் 'சத்தியத்தால் உயர்ந்தவன் அரிச்சந்திரன்' 'சத்தியத்திற்காக உயிரைத் தியாகம் செய்தவன் தசரதன்' 'பொய்யுரை புகன்ற பிரம்ம தேவருக்கு ஆலயம் இல்லை' 'பொய்க்கரி சொன்ன தாழம்பூ சிவபூசைக்குப் பயன்படுவது இல்லை' போன்ற விடயங்கள் புரியும்படி அக்கதைகளைச் சுருக்கமாகக் குழந்தைக்குக் கூறவேண்டும்.

நாலு வயதின் பின் குழந்தை சொல்லும் 'பொய்' பெரும்பாலும் தண்டனையைத்தவிர்க்கும் நோக்குடையதாக இருக்கும். அல்லது சங்கடமான ஒரு சூழ்நிலையில் இருந்து தப்பிக் கொள்ளும் நோக்கமுடையதாக இருக்கும். தண்டனை கிடைப்பதற்கான நிகழ்தகவு எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்குப் 'பொய்'கூடும். தண்டனை வழங்கப்பட மாட்டாது என்பது உறுதியாகிவிட்டால் பிள்ளை உண்மையைக் கூறிவிடும்.

தந்தையாரின் 'பேனா' மேசையில் இருக்கிறது. பிள்ளை எடுத்துப் படம்கீறி விளையாடியது. பின்னர் பகுதி பகுதியாகக் கழற்றிப் பார்த்தது, மறுபடி பூட்டத் தெரியவில்லை. வைத்துவிட்டுப் போய்விட்டது. தந்தை வந்தார். ''எனது பேனா எடுத்தாயா?'' என்று கேட்டார் பிள்ளை. ''இல்லை', என்று கூறிவிட்டது. தந்தை தன்னைத் தண்டிப்பார் என்ற முன் உணர்வே இதற்குக் காரணம். ''பேனா என்பது விளையாட்டுப்பொருள் அல்ல. அது பழுதடைந்து போனால் புதிது வாங்கக் காசு வேண்டும் ''என்று அன்புடன் தந்தை விளக்குவார். ஆனால் தண்டிக்கமாட்டார் என்று குழந்தை உணர்ந்தால் உண்மையைக் கூறிவிடும். ஆகவே குழந்தை உண்மை பேசுவதும், பொய் கூறுவதும் பெற்றோரின் நடவடிக்கையிலேயே தங்கியிருக்கிறது.

சில சமயங்களில் தாங்கள் பாராட்டப்படவேண்டும் அல்லது தமது செயற்பாடு மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் என்பதற்காய் பிள்ளைகள் பொய் கூறுவர். விளையாட்டுப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றபிள்ளை வீட்டில் சென்று தான் முதலாமிடம் பெற்றேன் என்று கூறுதல் இத்தகைய ஒன்று.

பல குழந்தைகள் கூடி இருக்கும் இடங்களில் ஒரு குழந்தை மற்றையோரின் கவனத்தை ஈர்ப்பதற்காகத் தானே புனைந்த கதைகள் பலவற்றைக் கூறும். இது 'புழுகு' எனப் படுகிறது. தன்னை மற்றக் குழந்தைகளைவிடக் குறைவாக நினைத்துக்கொள்ளும் தாழ்வுச் சிககல் உள்ள குழந்தைகளிடம் இந்த இயல்பு அதிகமாகக் காணப்படும்.

குழந்தை தவறு செய்யும் போது பெற்றோர் பொதுவாக ''செய்தாயா'' என்று கேட்காமல் ''ஏன் செய்தாய்?'' என்று கேட்பதால் பிள்ளை பொய் கூறும் சந்தர்ப்பத்தைக் குறைக்கலாம். சிறு வயதிலிருந்தே குழந்தைகள் உண்மையைப் பேசப் பழக்கப்படுத்தப்படல் வேண்டும். 'இடையனும் ஓநாயும்' கதையைக் கூறுவதன் மூலம் பொய் பேசுவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உணர்த்தலாம்.

கட்டிளமைப் பருவத்தின் பிற்பகுதியில் அல்லது அதற்குப் பின்னர் பொய் பேசுதல் மனிதரில் ஒருவகை ஸ்திரமற்ற மனோநிலை இருப்பதைக் காட்டும் இவர்கள் வாய்ச் சொல் வீரர்கள். பெரும்பாலும் பார்வைக்குக் கவர்ச்சிகரமான தோற்றம் உடையவராய் இருப்பார். நாள் தோறும் புதிய புதிய கதைகளைக் கூறுவர். சில சமயம் மிக வேடிக்கையாக அவை விரியும். 'நான் யாழ்ப்பாணத்தில் நின்றபோது ஒரு 'ஷெல்' விழுந்த சத்தம் கேட்டது. என்று யாராவது சொன்னால் போதும், இவர்கள் அதை அடுத்தவரிடம் சொல்லும் போது, ''இன்று யாழ்ப்பாணத்தில் 'ஷெல்' விழுந்து நூறு பேர் சரியாம்..'' என்று மாற்றிவிடுவர். இவர்களை ஒரு முறை இனம் கண்டுகொண்டால், பின்னர் அவர்கள் கதையைக் கேட்டு ரசிப்பதுடன் அதை மறந்துவிடலாம்.

'சத்தியத்தின் அதி தீவிர தன்மையே எனது சித்தாந்தம்' என்று காந்திஜி கூறினார். அத்தகைய மகான்களை உருவாக்குவது பெற்றோரிலேயே தங்கியிருக்கிறது.

கோகிலா மகேந்திரன்

---

### சிக்கனம்

மேசையொன்றும் முக்காலியொன்றும் அருகருகே இருந்தன. அவை தம்முள் அநேக கதைகள் பேசிமகிழ்ந்தன. கீரை விலை தொடக்கம் அரசியல் வரை பேசின. ஒருநாள் சமநிலையில் நிற்பது பற்றி இரண்டும் பேசின. முக்காலி கூறியது ,'எதிலும் சிக்கனம் வேண்டும் பார். நான் மூன்று காலில் எவ்வளவோ உறுதியாகநிற்கிறேன் நீயோ, நான்கு கால்களை உபயோகிக்கிறாய் சிக்கனமென்பது பற்றி உனக்குத்தெரியாது எனவே ஒ ' காலை வெட்டியெறிந்துவிடு. மேசைக்கும் முக்காலி கூறியது சரியாகவே பட்டது. ஒரு காலை வெட்டி வீசிவிட்டது. பாவம் உடனே தலைகுப்புற வீழ்ந்தது.

—உதங்கா

# ராஜ்காட் வேட்டுக்கள்

அண்ணல் காந்தியின் 'ராஜ் காட்' சமாதியில் வைத்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திமீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சி முறியடிக்கப்பட்டது. ஆறுதலளிக்கும் ஒரு விடயமாகும். ஆயினும் அம்முயற்சியின் பாணியையும், அது இடம்பெற்ற சூழ்நிலையையும் ஆராயும்போது, இந்த 'ராஜ்காட்' கொலைமுயற்சி முறியடிப்புடனேயே ராஜீவ்மீதான கொலைப்பயமுறுத்தல்களுக்கும் 'சமாதி' கட்டப்பட்டு விட்டதாக எவரும் எண்ணிவிட முடியாது.

ராஜீவின் தாயார் திருமதி இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டது முதற்கொண்டே ராஜீவ்மீது கொலைப்பயமுறுத்தல்கள் அவ்வப்போது விடுக்கப்பட்டு வந்துள்ளன. இப்பயமுறுத்தல்களுக்கு சவாலாக தீவிரபாதுகாப்பு ஏற்பாடுகளை இந்திய பாதுகாப்புச்சேவை ஏற்படுத்தியிருந்தது.

ஆயிரத்து ஐநூறு பேர் கொண்ட பிரத்தியேக பாதுகாப்புச் சேவைப் பிரிவொன்றும் ராஜீவ்காந்தியின் பாதுகாப்புக்கருதி இயங்கிவருகின்றது ஆயினும் இந்தஏற்பாடுகளையெல்லாம் 'ராஜ்காட்' சூட்டுச் சம்பவம் துச்சமாக்கி விட்டுள்ளது.

சம்பவதினம் 'ராஜ்காட்' பலத்த பாதுகாப்புக்குட்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அன்றையதினம் 250 பேர்கொண்ட பாதுகாப்புப் பிரிவும் சேவையிலீடுபட்டதாகக் கூறப்பட்டது

இதில் முக்கியமென்னவென்றால், பிரதமர் ராஜீவின் பரிவாரம், மற்றும் காந்தி அஞ்சலிக்கு அன்று வந்திருந்தவர்களைவிட, பாதுகாப்புப் பிரிவினரின் எண்ணிக்கையே கூடுதலாக இருந்துள்ளது.

ஏனெனில் அன்றைய காந்தி ஜயந்தி தினத்தின் கிதாஞ்சலிக்காகவும், தொடர்ந்து ஜனாதிபதி - பிரதமர் ஆகியோரின் மௌனப் பிரார்த்தனைக்காகவும் குறிப்பிட்ட மிகச் சிலரே 'ராஜ்காட்' சமாதியருகே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஒரு கவசம் போன்று செயல்பட்டிருக்க வேண்டிய 'அந்த 250' பேரும் அவ்வேளை என்ன செய்துகொண்டிருந்தார்கள்? என்பதே கேள்விக்குரியதாகியுள்ளது.

துப்பாக்கிநபர் திடீரெனப் பிரவேசிக்கவில்லை. அல்லது ராஜீவுடனிருந்த கூட்டத்தில் ஒருவனாகவும் அவனிருக்கவில்லை

பதுங்கித்தாக்கும் (Ambush) ஒரு கெரில்லா போல புதர் ஒன்றுக்குள்ளிருந்து அவன் செயல்ப்பட்டுள்ளான். இத்தாக்குதல் முறை சாதாரணமானது

ஆனால் அன்று 'ராஜீவின் பாதுகாப்பு' என்று புறப்பட்டவர்கள் ராஜ்காட்டுக்கு ஏதோ புதியவர்கள்போல இருந்துள்ளார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

இறுதியில் துப்பாக்கிநபர் ஒருவாறாக மறிவளைத்துப் பிடிக்கப்பட்டான். ஆயினும் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னரே இது நடந்துள்ளது

'வெள்ளம் வருமுன் அணை கட்டுதல்'; இதுவேபாதுகாப்பு என்பதன் அர்த்தமாகும். ஆனால் அன்றைய ராஜ்காட் சம்பவம் இதற்கு எதிர்மாறாக நடந்துள்ளது.

ராஜீவ் அன்று உயிர்தப்பியது அவரது சொந்த அதிஷ்டமாகும்: ஆனால் அவருக்கு வேலி போட்டவர்களால் தம்மிடையே இருந்த துவாரத்தை அறிடமுடியவில்லை

இந்நிலையில் ராஜீவின் பாதுகாப்பு என்பது தொடர்ந்து கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்கு விடைகாணுமுனவரை ராஜ்காட் வேட்டுக்கள் இந்தியாவின் மூலைமுடுக்குகளில தொடர்ந்தாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

* * *

## டானிலோவ் ராஜதந்திரம்

அமெரிக்கப் பத்திரிகையாளர் நிக்கோலஸ் டானிலோவ் ஒருமாதகால தடுப்புக்காவலின் பின்னர் சோவியத் அரசினால் கடந்தவாரம் விடுதலை செய்யப்பட்டார்.

உளவாளி எனக் காரணங்காட்டி சஞ்சிகை ஒன்றின் ஆசிரியரான இவர் மாஸ்கோவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

ஓர் உளவாளி என்ற ரீதியில் இச் சாதாரண பத்திரிகையாளர் கைதானாலும் இவர் விடுதலையானபோது ஒரு ராஜதந்திரப் புள்ளியாகவே வெளியேறினார்.

இரு வல்லரசுகளின் சந்திப்பை இவரது தடுப்புச் காவல் நிர்ணயித்ததே இந்நிலைக்குக் காரணமாகும்.

டானிலோவ் விடுதலைசெய்யப்படாதவரை சோவியத் அதிபர் கோபச்சேவுடனை அமெரிக்க அதிபர் றீகனின் சந்திப்பு இடம்பெறுவது சாத்தியமல்ல என்று றீகன் நிர்வாகம் அறிவித்துள்ளது இதனையடுத்து சோவியத் அரசு எதுவித நிபந்தனையுமின்றி டானிலோவை விடுதலை செய்தது.

டானிலோவ் ஒரு சாதாரண நபர் என்று அமெரிக்கா கூறியுள்ளபோதிலும் உளவு வேலையில் ஈடுபட்ட போது கையும் மெய்யுமாக இவர் கைதானார் என்று சோவியத் கூறியிருந்தது.

இதேவேளை சோவியத் நாட்டவரான சக்காரோவை (ஐநாவில் பணியாற்றியவர்) அமெரிக்க அரசு ஓர் உளவாளிஎனக் குற்றஞ்சாட்டி தடுத்துவைத்திருந்தது

இறுதியாக டானிலோவ் விடுதலை செய்யப்பட்டதையடுத்து சக்காரோவையும் அமெரிக்கா விடுதலை செய்தது.

சோவியத் யூனியனாலும், அமெரிக்கவாலும், இவ்விருவரும் பரஸ்பரம் உளவாளிகள் எனக்கருதப்பட்டாலும். இவ்விருவரினதும் அமெரிக்க சோவியத் வாழ்க்கை றீகனையும் கோபச்சேவையும் ஒரு மேசையில் சமரசம் பேசவைத்த நல்லகாரியத்துடன் முடிவடைந்தது மட்டும் ஏதோ உண்மையாகும்.

# உலக அரங்கு

## அமெரிக்க தடை

இவ்வார உலக அரசியலில் முக்கியத்துவம் பெறும் அடுத்த நிகழ்ச்சியாக தென்னாபிரிக்காமீது அமெரிக்கா கொண்டுவந்துள்ள கடுமையான பொருளாதார தடை விளங்குகிறது

இத்தடை கொண்டுவரப்பட்டதைவிட இது நிறைவேற்றப்படுவதற்குப் பட்டபாடே பெரும்பாடாகவுள்ளது

அமெரிக்க காங்கிரஸின் (பாராளுமன்றம்) பிரதிநிதிகள் சபையில இப்பொருளாதாரத் தடை மீதான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டபோது. அதிபர் றீகன் இதனை தமது வீட்டோ

அனந்த்

அதிகாரத்தின் மூலம் ரத்துச் செய்தார்.

ஆனால் செனட் சபையில் அவரின் இந்த 'வீட்டோ' ஜம்பம் பலிக்கவில்லை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அங்கு தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத்தடை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து தென்னாபிரிக்காவுக்காக இதுவரை ஒலித்த றீகனின் குரலும் அடக்கப்பட்

(4ம் பக்கம் பார்க்க)

# வல்லரசு நாடுகளையே திணறடித்த பத்திரிகையாளர் டானிலோவ்

**ஒரு (அமெரிக்க) பத்திரிகையாளர் கைதானதால் வல்லரசு தலைவர்களின் உச்சிமகாநாடே கேள்விக்குறியாகியது...!**

"வாள் முனையை விட பேனா முனை சக்திமிக்கது" என யாரோ கூறி வைத்தார்கள். இந்தப் பேனா மன்னர்களில் முக்கியமானவர்கள் பத்திரிகையாளர்கள். ஒரு நாட்டின், இவ்வுலகின் அனைத்துத் துறைகளிலும் பத்திரிகைகள் எவ்வளவு ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. அப்படியானால் அந்தப் பத்திரிகைகளின் உயிர் நாடியாக விளங்கும் பத்திரிகையாளரின் சக்தி பற்றிச் சொல்லவே தேவையில்லை

இலங்கையில் தார்ஸி விட்டாச்சியின் '58 அவசரகால நிலை'' எழுப்பிய பூகம்பத்தை அனைவரும் அறிவோம், இந்தியாவில் ஒருமாநிலத்தின்முதல் வரையே தூக்கி வீசியவர் அருண்ஷோரி என்ற பத்திரிகையாளர்.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி, 'சர்வ வல்லமை' மிகுந்த இரு வல்லரசுத் தலைவர்களையே வாய்ப் போரில் [War-of Words] இறங்க வைத்து, அவர்களுக்கிடையே நடைபெறவுள்ள உச்சி மாநாட்டைக் கேள்விக்குறியாக்கினார் ஒரு அமெரிக்கப் பத்திரிகையாளர்.

அவர் தான் இப்போது சர்வதேச 'பெயர்' பெற்றுவிட்ட நிக்கலஸ்டானிலொவ். 52 வயது நிரம்பிய திரு டானிலொப் கடந்த ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி மாஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.



அமெரிக்காவின் 'நியூஸ் அன்ட் வேர்ல்ட் ரிப்போர்ட்' வாராந்த சஞ்சிகையின மாஸ்கோ பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு. டானிலோவின் கைது நியூயோர்க்கில் சோவியத்தின் ஐநா பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகித்த திரு. ஜென்னடி ஸக்காரோவ் (Gennedy Zakharov வின் கைதுக்குப் பதில் நடவடிக்கையாகவே அமைந்தது என்பது ராஜதந்திரிகளின் கருத்தாகும்.

## ஸக்காரோவ் கைது

39வயதான திரு. ஸக்காரோவ் கடந்த ஆகஸ்ட் 23ம் திகதி நியூயோர்க்கில் கைது செய்யப்பட்டார்

திரு ஸக்காரோவ் ஐநாவில் சோவியத் பிரதிநிதிக் குழுவில் விஞ்ஞானியாகக் கடமையாற்றுகிறார்.

இவர் கடந்த மூன்றுண்டுகளாக நியூயோர்க்கில் கல்வி பயிலும் கயானா நாட்டு மாணவரொருவரிடம் கம்பியூட்டர் தொழில் நுட்ப ரகசியங்களைக் களவாடித் தரும்படி கேட்டு அதற்குப் பணம் கொடுத்து வந்தாரென அமெரிக்கப் புலனாய்வுத் திணைக்களம் (எவ் பி. ஐ கூறுகிறது இந்த கயானா மாணவர் எவ். பி ஐ யின் உளவாளியாகக் கடமையாற்றியவர்.

ஆயினும் திரு ஸக்காரோவ் சோவியத் யூனியனுக்கு பயன் தரக்கூடிய தொழிநுட்ப ரகசியமெதையும் இம் மாணவரிடமிருந்து பெறவில்லை இதே வேளை திரு, ஸக்காரோவை மடக்க எவ். பி ஐ திட்டம் தீட்டியது. அது இந்த கயானா மாணவரிடம் எவ் பி ஐ 3 'தரம் குறைந்த' கம்பியூட்டர் தொழிநுட்ப ரகசியங்களைக் கொடுத்தது. நியூயோர்க் ரயில் நிலையமொன்றில் இந்த ரகசியங்களைக் கயானா மாணவரிடமிருந்து பெற்றுக் கொள்கையிலகாத்திருந்த எவ் பி ஐ. ஏஜண்டுகள் ஸக்காரோவை மடக்கிப் பிடித்தனர்.

## சோவியத்தின் ஆத்திரம

திரு ஸக்காரோவ் கைது செய்யப்பட்டது சோவியத் யூனியனின் உயர் அதிகாரிகளுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது என்றே கூற வேண்டும். ஆயுதக் கட்டுப்பாட்டுப் பேச்சுக்களை அதி உயர் மட்ட ரீதியில் நடத்துவதற்காக இரு வல்லரசுகளையும் சந்திக்கவைக்கப் பெருமுயற்சி எடுக்கப்பட்டுவரும் இவ் வேளையில் மூன்றுண்டுகளாக எவ் பி.ஐ கண்டும் காணாமல் விட்ட ஒரு விஷயத்தை கிளறி சோவியத்தை ஏன் சங்கடப்பட வைக்க வேண்டும் என அவர்கள் ஆத்திரமுற்றதில் நியாயமுண்டு தான்.

## டானிலொவ் கைது

கடந்த பல ஆண்டுகளாக மாஸ்கோவில் பணி புரிந்து வரும் திரு டானிலொவ் சரளமாக ரஷ்ய மொழியைப் பேசக்கூடியதாகவிருந்ததுடன் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் பல ரஷ்யர்களையும் தெரிந்து வைத்திருந்தார்.

திரு டானிலொவ்வின் சோவியத் ரத்தமும் ஓடுகிறதென்பது பலரறியாத ரகசியமாகும். அவரின் மூதாதையருள் ஒருவரான திரு. அலெக்சாண்டர் ஃப்ரோபொவ் 1825 ம் ஆண்டில் இவர் அங்கம் வகித்த 'டிசம்பர் குழு' உறுப்பினர்களுடன் சேர்ந்து ஸார் மன்னரைப்பதவிகவிழ்க்க சதிசெய்தார் என்ற குற்றச் சாட்டில் பல ஆண்டுகள் சைபீரியாவில் 'தண்டனை' அனுபவித்தார்.

திரு. ஃப்ரோலொவைப் பற்றி ஒரு புத்தகம் எழுத உத்தேசித்ததிரு டானிலொவ் ஆறுமாதவிடுமுறையில மாஸ்கோவை விட்டுப் புறப்படத் தயாரானார் - அதற்கு முன்னர் அவரது நண்பரென க் கூறப்படும் மிஷின் என்ற நபர். மாஸ்கோவின் ஒதுக்குப்புறமொன்றில் டானிலொவிடம் 'பார்ஸல்' ஒன்றைக்கையளித்தார்

[4ம் பக்கம் பார்க்க]

இ. செந்தில்

# சக்தியின் பெருமை

## கௌரீதசகம்

பாதமலர் மனத்திருத்திப் பரவுதியா
னத்தகலாப் பண்பி னோர்க்கு
வாதனைசெ யவாத்தளையின் வருதுயர
மாய்த்தருள்வா ளுலகம் யாவும்
ஏதமற ஆளிறைவி யிறைவனுடற்
பாதிகொண்டாள் எழிலான் மிக்காள்
காதமரும் விழிகமல மானுமம்மை
கௌரியைநான் இறைஞ்சு கேனே.

பொருள்:- தனதுமலர் போன்ற பாதங்களை மனத்திலே பதித்து. துதிக்கும் நினைப்பு நீங்காத தன்மையரான அடியார் செய்கின்ற ஆசையாகிய பாசத்தால் மேன்மேலும் வருந்துன்பங்களை நீக்கியருள்பவளும், எல்லா உலகங்களையும் கேடின்றிக்காப்பவளுமாகிய நம்பெருமாட்டி சிவனுடைய திருமேனியின் பாதியைத் தனதாக்கிக் கொண்டவள், பேரழகு வாய்ந்தவள். அவளுடைய காதளவோடிய கண்கள் தாமரைமலர் போன்றவை. அவளே உலகமாதாவாகிய கௌரி, அவளை நான் புகழ்ந்து வணங்குகிறேன்.

தமிழில்: தி. சதாசிவஐயர்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ கொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்

டென்மார்க் செல்வதற்கு
உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
உடன் தொடர்புகொள்ளவும்:

**INTERSUN GROUP,**

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய். (A 1347)


## ரதோற்சவ ஒளிபரப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் நடைபெற்ற ரதோற்சவ நிகழ்ச்சி பற்றிய ஒளிபரப்பு ரூபவாகினியில் இன்று 5-ம் திகதி மாலை 5-30 மணிக்கு இடம்பெறும். பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவில் வழிபடுவோர் சபையினர் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர். (ப)

## உண்ணாவிரதம்

நெல்லியடி, சனி
வெலிக்கடை, பூஸா தடுப்பு முகாம்களில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்கள், யுவதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஒருநாள் உண்ணாவிரதம் இன்று ஞாயிறு கரணவாய் தெற்கு இளங்கோ சனசமூக நிலையத்தில் நடைபெறுகின்றது. (வ)


## ஆத்மீக அன்பர்களுக்கோர் நற்செய்தி


**பஜனாவளி**
**(கூட்டுப்பிரார்த்தனை நூல்)**
**120 பக்கங்களுக்கு மேல்**
**மலிவுப் பதிப்பு ரூபா 10/- மட்டும்**

இதுவரை வெளிவந்த பல பஜனாவளி கூட்டுப் பிரார்த்தனை நூல்களிலிருந்து தொகுக்கப்பெற்று பக்திரசம் ததும்பும் இனிய பாடல்களுடன், விநாயகர், சிவன், சக்தி, முருகன், கண்ணன், வைரவர் ஆதிய தெய்வங்களுக்குரிய தோத்திரங்கள், நாம ஸங்கீர்த்தனங்களுடனும் யாவரும் ஒருமிக்கச் சேர்ந்து பாடப் பயன்படும்படியான இப் புத்தகம் அமரர் புரவலர் தம்பு விஸ்வப்பா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளான 22-11 86ல் வெளியிடப்படும் புத்தக விற்பனை நிலையங்களில் இது மலிவுப் பதிப்பாக வெளிவருவதால் பெற இயலாது. தேவையானோர் தபாற்செலவுடன் சேர்த்து ரூபா பதினான்கு அனுப்பி முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.


ஆறுமுகம் கந்தையா
இயக்குநர்.

புரவலர் தம்புவிஸ்வப்பா
நினைவுக்குழு,
'சிவா பிறின்டேர்ஸ்'.
41, மெயின் வீதி, கைதடி. C 4985






# மேலும் மாதாந்தம் 100 எனஜைஸர் விளக்குகள் !



இதோ! எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை வாங்குவோருக்கு மாபெரும் பரிசுத் திட்டம்:

இதுமிகவும் சுலபமான போட்டி. இவ்விளம்பரத்திலுள்ள ஒன்பது பூனைகளையும் நன்றாக அவதானியுங்கள். இவற்றுள் எட்டுப்பூனைகள், எவரெடி பட்டரியில் காணப்படும் எவரெடி பூனையைவிட, வித்தியாசமாக உள்ளன. ஆனால் ஒரேயொரு பூனை மாத்திரம் அசல் "எவரெடி பூனை" ஆகும்.

அதனைச் சரியாக இனம் கண்டுபிடிக்கும் அதிர்ஷ்டசாலிக்குரிய பரிசு ரூபா 100,000!

மேலும் 300 எனஜைஸர் விளக்குகள் !!

போட்டி முடிவு திகதி 1986 நவம்பர் 30.

பரிசை வெல்ல நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

இதில் காணப்படும் பிரவேசக் கூப்பனை நிரப்புங்கள். எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை இணைத்துச் சுற்றியுள்ள பொலித்தீன் உறைக்குள் காணப்படும் "வெல்லுங்கள் ரூபா 100,000/-" என்ற சொற்கள் அடங்கிய துண்டை கூப்பனில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டியபின், எவரெடி, த. பெ. இல. 1477, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம், ஆனால் ஒவ்வொரு கூப்பனிலும் "வெல்லுங்கள் ரூபா 100,000" என்ற சொற்களடங்கிய துண்டு ஒட்டப்பட்டிருக்கவேண்டும்.

பரிசுக் குலுக்கலும் பரிசுகளும்

100 எனஜைஸர் விளக்குப் பரிசுகளுக்கான குலுக்கல் முறையே செப்ரெம்பர் 30, ஒக்டோபர் 31, டிசம்பர் 1 ஆகிய திகதிகளில் இடம்பெறும். இதில் மொத்தமாக 300 விளக்குப் பரிசுகள் உண்டு.

மாபெரும் ஜாக்பொட் பரிசுத்தொகை 100,000 ரூபாவுக்கான குலுக்கல் டிசம்பர் 1ந் திகதியன்று நடைபெறும்.

நீங்கள் அனுப்பும் போட்டிக் கூப்பன்கள் ஒவ்வொரு பரிசுக் குலுக்கலுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதனால் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளை நீங்கள் வெல்லமுடியும். பரிசுபெற்றோர் விபரம் புதினத்தாள்களில் பிரசுரிக்கப்படும்.

தாமதிக்காதீர்கள் - போட்டிக் கூப்பன்களை அனுப்பத் தொடங்குங்கள்!

யூனியன் காபைட் சிலோன் லிமிடெட், பீனிக்ஸ் அட்வடைசிங் சேவிசஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் இப்போட்டியில் பங்குபற்ற அருகதையற்றவர்கள்.

எவரெடி பூனை இனம் கண்டுபிடிக்கும் போட்டிக் கூப்பன்

அசல் எவரெடி பூனையின் இல: ☐

பெயர்: ____________________

விலாசம்: ____________________

பட்டரி வாங்கிய கடைகாரரின் பெயரும் விலாசமும்: ____________________

துண்டை இங்கு ஒட்டுக

Licence No.S/533




## உலகோர் நாடி வாங்குவது எவரெடி

Phoenix

# பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட் ★ பெல்ஜியம்
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலண்ட் ★ டென்மார்க்

எங்கள் பிரதிநிதிகள் உங்களை குறித்த நாட்டில் கொண்டு போய் விடுவார்கள்.

பாஸ்போட், பொண்ட், ரிக்கற் உடன் செய்து தரப்படும்.

**டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
[ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை]
உடுவில் கிழக்கு, உடுவில். A 1372

# டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள்

1. கேக் ஐசிங் 2. சமையற்கலை 3. தையற்கலை
4 கூந்தல் அலங்காரம் 5. கோலம் 6 பூவேலை
7 கைவேலை [மகறம், பொம்மை, நூல் வேலை]
8. கண்ணாடிகளிலும் துணிகளிலும் வர்ணம் தீட்டுதல் 9 ஆங்கிலம்.

இத்துடன் இலவசமுதலுதவி வகுப்புகளும் நடைபெறும்.

* பயிற்சிகள் யாவும் 9 மாத காலம் நடைபெற்று சான்றிதழும் வழங்கப்படும்.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 15-10-86**

விபரங்கட்கு:

# LADIES' ACADEMY

(Regd. No. 15918)
VICTORIA ROAD (Near Subhas Tourist Hotel)
JAFFNA. [C 4991]

## கப்பலில் செல்வதற்கு

# பிரயாண ஒழுங்குகள்

★ Chief Officer ★ Chief Engineer
★ Second Officer ★ Second Engineer
★ Third Officer ★ Third Officer
★ Radio Officer ★ Oiler
★ Electrician, Fireman Pumpman

Officers need Foreign Licence.

Contact:

# NEW MARIYA Shipping & Travels

NEW LALITHA BUILDING,
185/1, KASTHURIAR ROAD, JAFFNA.
(A 1386)


# ஈட்டு விற்பனவு விளம்பரம்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கு**

இலக்கம் ஈடு / 4371

இளவாலை யோ. அ. வி. இராசநாயகமும் பெண் மேரி யூஜினுவும் — வழக்காளிகள்

எதிராக

இளவாலை, தெல்லிப்பழை தென்மேற்கு

அ. இம்மானுவேல் பூபாலசிங்கம் — எதிராளி

ஈடு/4371 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1986ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை (23-10-1986) முற்பகல் 10 00 மணி தொடக்கம் எனக்களித்த அதிகாரத்தின்படி அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை**

முதல் வட்டி ரூபா 21,975/- மேலும் இதில் ரூபா 15,000/க்கு 16-9-1981 தொடக்கம் 12-1-1984 வரைக்கும் வருடமொன்றுக்கு 36% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 12 % வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 6156/- மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவில்பற்று தெல்லிப்பழை வட மேற்கிறை "பத்தாவத்தை" நிலப்பரப்பு இரண்டும், வீடும், செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு சவுந்திரநாயகம் பெண் செல்வநாயகிக்கும் பேரின்பநாயகம் பெண் புஸ்பநாயகிக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு ஒழுங்கை, மேற்கு மரியாப்பிள்ளை இராசநாயகத்துக்குரிய ஆதனம், தெற்கு செலஸ்தியன்பிள்ளை யோசேப்புவிற்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும் மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றிற்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். H 491/138

வ. சி. மகாதேவன்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
ஏலவிற்பனவாளர்.

53, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 28-9-1986. C 5003

# கேள்வி அறிவித்தல்

## காரியாலய திருத்த வேலைகள்

மானிப்பாய் பரிஷ்.தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க காரியாலய கட்டிட திருத்த வேலைகளுக்கான கேள்விகள் கட்டிட ஒப்பந்தக்காரரிடமிருந்து 14 10 86ம் திகதி முற்பகல் 11-00 மணிவரைகுறித்த சங்க நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கக்கூடிய ரூபா 100/- ம் மீளளிக்கப்பட முடியாத ரூபா 25-/யும் செலுத்தி கேள்விபபத்தி த்தை சங்கத்தில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விகள் 14-10 86ம்திகதி முற்பகல் 11-30 மணிக்கு சங்க நிர்வாகத்தால் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர்களும் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை காரியாலய கடமைநேரத்தில் சமுகமளித்து அறிந்துகொள்ளலாம்.

க. சந்திரராசா,
பொது முகாமையாளர்.
மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,
மானிப்பாய்.

(A 1434)

# 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**ஆனையதம்பி செல்லப்பா**

(முன்னாள் உரிமையாளர் - செல்லப்பா அன் கொம்பனி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

தோற்றம்: 20-06-1914
மறைவு: 26-09-1984
திதி: 5-10-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை அன்புடன் ஆதரித்து உலகினிலே ஒளி பெறச்செய்து எம்மையெல்லாம் நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்கள்? இன்றைய தினம் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள், நண் ரிகள்.

239/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[C 5010]

# சமூகசேவையில் பேரானந்தம் கண்டவர்



வீபிறநுக்காக வாழ்ந்து, ஒளிசி மறைந்தவர்களில் ஒருவர் சமீபத்தில் காலம் சென்ற கனகசபைப் பத்தர் என்றால் மிகையல்ல! இவருக்கு மறையும் போது வயது 82.

கனகசபைப்பத்தர் என்றாலே யாழ். நகரில் இவரை அறியாதார் யாருமில்லை. யாழ். நாச்சிமார் கோயிலடியின் வரலாற்றிலே கனகசபைப் பத்தருக்கும் மிக முக்கிய இடம் உண்டு. நாச்சிமார் கோயிலடியில் அமைக்கப்பெற்ற தேர், மணிக்கூட்டுக் கோபுரம், ராஜகோபுரம் என்பனவற்றில் எல்லாம் அவரின் பங்களிப்புக்கள் மிக உயர்வானவை.

ஆபரணவேலைகளில் அழியா இடம்பெற்ற இச்சமூகத் தொண்டன் அம்பாளின் மீது மிகப்பக்தி கொண்டவர். பத்தர் சமூகத்திற்கு அவர்செய்த தொண்டு அறியாதார் அறியாதாரே!

நேற்று இவருடைய 31வது நினைவு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஏழை எளியவர்கட்கு அவரின் பெயரால் அன்னதானமும் கோயிலில் வழங்கப்பட்டது. அவர் ஆத்மா சாந்தியடைக! வாழ்க அவர் திருநாமம்.

— தர்மன்

# அந்தியேட்டி அழைப்பு

**சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன்**

ஆவணிமாதம் 21ம் திகதி (6-9-86) காலமான திரு சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் அவர்களின் அந்தியேட்டி புரட்டாதி மாதம் 19ம் திகதி (5-10-86) இன்று பம்பலப்பிட்டி ஸ்ரேசன் வீதியிலுள்ள 9/3, இலக்க இல்லத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் அழைப்பை ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, மக்கள், சகோதரிகள்.

34, காட்டுக்கந்தோர் வீதி,
சுண்டிக்குளி.

[C 4962]

# விழிப்புக்குழு

யாழ்ப்பாணம், ஞாயிறு முஸ்லிம் வட்டாரம் கிராம சேவையாளர்பிரிவு 29 க்கான விழிப்புக்குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலைவர் எஸ். ஏ சி. ஜமால்தீன், செயலாளர் எம். கிதாயர், பொருளாளர் எஸ். ஏ சி. சனூன்.

பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. [வா]

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரரான
**சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன்**
அவர்களின் (நிதி அமைச்சு உயர் அதிகாரி)

பிறப்பு: 13-01-1930
மறைவு: 05-09-1986
திதி; 05-10-1986

கூர்மாமதிக்
கோனிவனெத்
தேர் அரசுயர்
சீர்திகழ்ந்தனே
குலநலவெழிற்
றிலகமென்புகழ்
புனைசங்கர
மணிவிளக்கென
அனைவருஞ் சால
களிவளத்துடன்
பழம்பிள்ளையார்க்
குளமாயினை
நாத,
மகிப, மனந்தாங்காதே
யெம்
அகத்தை ஏனோ
அகன்றாய் ஐயனே
உளம் உடைந்த
மனைவி, மக்கள்
உடன்பிறந்தார்பிள்ளைகள்.

ரங்கூன்,
சங்கரப்பிள்ளைவளவு,
மல்லாகம்.

(C-5011)

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**க. ஈசுரபாதம்**

தோற்றம்; 26-11-1931
மறைவு; 20-09-1986

முன்னாள் வெள்ளவத்தை அரசநெசவாலைப் பிரதம கணக்காளரும் கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபைச் செயலாளரும், கொழும்பு தமிழ்ச் சங்க உறுப்பினரும். எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்தவருமான க. ஈசுரபாதம் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு, 5-10-86 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகன், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாதனை,
பருத்தித்துறை.

[C 5002]

# பணிவான வேண்டுகோள்

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன குவாட்டர்சில் வசித்துவரும் எனது வீட்டில் 23-09-86 அன்று இரவு 8-30 மணியளவில் இனம்தெரியாத நபர்கள் வந்து எனது மனைவியையும், பிள்ளையையும் பலாத்காரமாக பயமுறுத்தி அறை ஒன்றில் விட்டு பூட்டிவிட்டு எமது நெஷனல் வீடியோ கசற் றெக்கோர்டர் Model No 390 - E M. Serial No. E 3 K B 07221 டெக்கை எடுத்துச்சென்றுவிட்டார்கள். இதுபற்றி தேடுதல் இட்டு எமது பொருளை மீட்டுத்தருமபடி புனிதமான இயக்கங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

M. S கனகராசா
(கீர்த்தி)
தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
ஆனையிறவு.

C 4976.

கடைசி நேர
வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு இரத்தினவாசா. கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. (பழைய புகையிரதநிலைய வீதி)
[C-5022]

NV 8620 Deck and 30 வீடியோ கசட்டும் விற்பனைக்குண்டு, 9/3 (New No 140/9), நந்தா வனம் ஒழுங்கை, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (C-5025)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



நடராசா
சண்முகராசா
(சமாதான நீதிபதியும், ஆயுர்வேத வைத்தியரும்)

மலர்வு: 02-04-1931

உதிர்வு: 07-09-1986

கொக்குவில் மேற்கு நடராசா வீதி ஞானபண்டித வைத்தியசாலை உரிமையாளர் ந. சண்முகராசா அவர்களின் மரணச் சடங்கில் நேரில் பங்குபற்றி ஆறுதல் கூறி தேறுதல் அளித்தவர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் வாடிக்கையாளர்கட்கும், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் 31-ம் நாள் வீட்டுக்கிருத்தியம் 7-10-86 செவ்வாய்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதினால் அத்தருணம் உறவினர் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
மைத்துனர்கள்.

C 5021

சாவகச்சேரி
# நீதிபதியின் இடமாற்றம் ரத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு
சாவகச்சேரி மாவட்ட நீதிபதி வி. பி. சுந்தரலிங்கத்திற்கு நீதிச் சேவை ஆணைக் குழுவினால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (எ)

## மாங்குளம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டுள்ளது'

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் இராணுவத்தினர் தரப்பில் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் தமதுதரப்பில் எதுவிதசேதமும் ஏற்படவில்லை என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா

## இம்மாதம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாசச் சுரண்ட எடுத்ததே நாம் தடைசெய்தமைக்கான காரணமாகும்.

இதன்காரணமாக சில சீட்டு விற்பனையாளர்கள் தமது அன்றாட வாழ்க்கையைக்கூட சிரமத்துடன் நடத்தவேண்டியதாயிற்று. இவர்களது பொருளாதாரப் பிரச்னையையும் நாம் நிவர்த்தி செய்ய வேண்டிய நிலையில் இச்சீட்டிழுப்பினை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளோம். இந்த மாதம் [ஒகடோபர்] 10ந்திகதி வெள்ளிக்கிழமை முதல் ரிக்கெட்டுகள் நாட்டின் சகல பாகத்திலும் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் பாதிக்கப்பட்ட சீட்டு விற்பனையாளர்கள் நேரிலோ அல்லது வேறுமுறையிலோ எமதுஸ்தாபனத் தலைமைப்பாசறை அல்லது தங்களுக்கு அருகாமையிலுள்ள பாசறையிலோ உடன் தொடர்புகொள்ளவும்'' (மா)

## எம்.ஜி.ஆர்...

[1ம் பக்கத்தொடர்ச்சி]

மேலும் இலங்கை தமிழர் நிலைகுறித்து தமிழ்நாடுகொண்டுள்ள கவலை பற்றியும் தாம் பூரணமாக அறிந்துள்ளதாகவும் திரு. காந்தி தெரிவித்தார். (சி)

வெலிங்டன்

10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த

**Space Hunter**
(Adults only)
Sex-Action-Thrill

லிடோ
தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30

பிரபு – நளினி
நடித்த
புதிய வெளியீடு
கள்
நியாயம்

## முக்கிய அறிவித்தல்

1-10-86 இல் இருந்து நடைபெறும் தூரசேவை லொறி ஹர்த்தால் சம்பந்தமான நடவடிக்கைகளை ஆராயும் பொருட்டு சகல லொறி உரிமையாளர்களையும் 5-10-86 இன்று பிற்பகல் 2 மணிக்கு ''ஹோட்டல் ஞானம்ஸ்''ல் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு சகலரையும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு:

| | |
|---|---|
| செயலாளர், | A. M. இராஜகோபால், |
| யாழ். முஸ்லீம் | செயலாளர், |
| போக்குவரத்து ஒன்றியம். | வட பிராந்திய |
| (C 5024) | போக்கு வரத்து சங்கம். |

# ஏவுகணைத் தாக்குதல் 60 சிறுவர் பலி

காபூல் ஒக்டோபர், 4
பாகிஸ்தானிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைத் தாக்குதலொன்றில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த 60 சிறுவர்கள் கொல்லப்பட்டதாக காபூல்வானொலி தெரிவித்துள்ளது.

கடந்த இரு வாரங்களுள் இச் சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## புலிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளாவது:

'மட்டக்களப்புமாவட்டத்திலுள்ள புல்லுமலை, புலி பாய்ந்த கல், பச்சைநூல் சேனை ஆகிய கிராமங்களை சுற்றி வளைப்பதற்காக நேற்று முன்தினம் வந்த நூற்றுக்கணக்கான கமாண்டோக்களுடன் எமது வீரர்கள் 3மணி நேரம் நேரடி மோதல் நடாத்தியதைத்தொடர்ந்து கமாண்டோக்கள் பின்வாங்கினர்

இத்தாக்குதலின் போது எமது தரப்பில் வீரரொருவர் காயமடைந்தார். கமாண்டோக்கள் தரப்பில் ஏற்பட்டுள்ள சேதவிரங்கள் தெரியவில்லை'. [மா]

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு
வெலிக்கடை பூஸா முகாம்களில் உண்ணாவிரதமிருக்கும் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கோண்டாவில் ஸ்ரீ ராமகிஷ்ண சேவாசிரமத்தின் ஆதரவுடன் இன்று அ. ந. நவி சனசமூக நிலைய மண்டபத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இன்று கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்

இவ்வுண்ணாவிரதத்தினை ஸ்ரீ அற்புத விநாயகர் சனசமூக நிலையம், குமரன் விளையாட்டுக் கழகமும், ஸ்ரீஇராமகிருஷ்ண சேவாச்சிரம கலா சாரசங்கமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளது. [வா]

★

மாவிட்டபுரம், நிருபர்
மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தினால் மக்கள் நலன் புரிக் குழுவின் ஆதரவுடன் நீரிழிவு நோய் குறித்த ஆய்வுக் கருத்தரங்கு ஒன்று இன்று இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் என் சரவணபவானந்தன், வைத்திய கலாநிதி எஸ். நாகநாதன் வைத்தியகலாநிதி ஆர் எவ். ஜேம்ஸ் வைத்திய கலாநிதி திருமதி சரவணபவானந்தன் வைத்திய கலாநிதி எஸ். பொன்னம்பலம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

கருத்தரங்கு முடிவில் ஆய்வுப் பரிசோதனைகளும் நடைபெறும். [எ]

★

மாவிட்டபுரம், நிருபர்
மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையின் அபிவிருத்தி கருதியும் நோயாளர்களின் குறைபாடுகளை தீர்க்கும் நோக்குடனும் இவ் வைத்தியசாலையில் அபிவிருத்திச் சங்கம் ஒன்று இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலை முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவரையும் இச்சங்கத்தில் பங்குபற்றி மார்பு நோயாளர்களுக்கு சிறந்த சிகிச்சை கிடைக்க வழி வகுக்குமாறு வைத்தியசாலை வைத்திய அதிகாரி கோரியுள்ளார்.

(எ)

## மாணவர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாத்திரை நடத்திய மாணவர்களுக்கும் பொதுமக்களும் நேற்றுமாலை தமது யாத்திரையை முடித்துக் கொண்டனர்.

கடந்த முதலாம் திகதி யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து திட்டமிட்டபடி பாதயாத்திரை ஆரம்பமானது தெரிந்ததே.

சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் சிறைக் கைதிகளை விடுதலை செய் அல்லது விசாரணைக் குட்படுத்து என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கூடாக இந்த நீண்ட பாதயாத்திரை இடம் பெற்றது.

வெய்யில்மழை பாராது சமிழீழ விடுதலைப் பாடல்களை சோகம் ததும்ப வீதிஓரமாக இந்த நீண்ட பாத யாத்திரைக் கோஷ்டியினர் பாடிய வண்ணம் சென்றதைக் கண்ட பார்வையாளர்கள் கண்களில் கண்ணீர் மல்கியதைக் காணக் கூடியதாக இருந்தது.

## புலிகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில், எமது வீரர் கங்கா (திருகோணமலை) அம்மண்ணின் மீட்புக்காக இறுதிவரை போராடி கடந்த 2-ம் திகதி வீரமரணமடைந்தார் என்றும் இவருக்கு எமது வீரவணக்கங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது

இது இவ்வாறிருக்க இரு நாட்களாக ஹெலிகொப்டர்கள், குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலுக்கு மத்தியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிப்படையினருக்கும் இடையில் நடைபெற்ற நேரடி மோதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

நான்கு நாள் பாதயாத்திரையை மேற் கொண்ட கோஷ்டியினர் நேற்று மாலை யாழ் பல்கலைக் கழகத்தை வந்தடைந்தனர். (மா)

## தேவை

மின் தறியில் (Power Loom) நான்கு அனுபவம் வாய்ந்த பெண் நெசவாளர்கள் தேவை.
8ம், 9ம் திகதிகளில் நேரில் சமூகம் அளிக்கவும்.

K. S. T. Tex,
(C 5018) பலாலிரோட், திருநெல்வேலி.

புதிய திரைபபடப் பாடல்
## இசைத்தட்டுகள்

1. கோடை மழை - (E.P)
2. பாரு பாரு பட்டணம்பாரு (-L.P)
3. தழுவாத கைகள் - (L.P)
4. மெல்லத் திறந்த கதவு - (L.P)
5. நாலுந் தெரிந்தவன் - (E P)
6. பன்னீர் நதிகள் - (E P)
7. ஸ்ரீ கிருஷ்ண தீபம் பக்திப் பாடல் - (L P)
8. சக்தி வருகிறாள் பக்திப் பாடல் - (L.P)
(L. R. ஈஸ்வரி)

அம்பாள் வீடியோ சென்ரர்
894, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி.
யாழ்ப்பாணம். (C-5019)

## எமது புதிய வெளியீடுகள்

1. மோகன் ★ அமலா
'உன்னை ஒன்று கேட்பேன்'
(V. G. P. MASTER)
2. ஜெமினிகனேசன் ★ சாவித்திரி
''சங்கமம்''
(pYRAMIDMASTER)
3. M. G. R. ★ ஜெயலலிதா
''தேர்த்திருவிழா''
(PYRAMID MASTES)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (A 1374)

எமது இன்றைய
## புதிய வெளியீடுகள்

''COMMANDO LEOPARDS, WAR BUS,''
தாக்குதல் வரிசையில் மற்றுமோர் நவீன தாக்குதல் சித்திரம்

1. "P.O.W. The Escape"
2. "Toy Soldiers"

மற்றும் பல தமிழ் ORIGINAL பிரதிகள் வெளியாகியுள்ளன.

வீடியோ பிரசாத்
இல 424, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(A 1388)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 5-10-86

இலங்கை அரசின் புதிய யோசனை குறித்து—

# கூட்டணி தனது கருத்தை இந்தியாவிடம் தெரிவித்துள்ளது

சென்னை, ஒக்டோபர் 4

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண்பது தொடர்பாக இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசிடம் தனது கருத்தைத் தெரிவித்துள்ளதாக திரு மு. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இத்தகவலை அவர் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் இலங்கைத் தமிழ் அகதிகளது மறுவாழ்வுப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்

இலங்கை சிறைச்சாலைகளில் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யப்படாமல் கடந்த ஒருவருடத்திற்குமேல் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவாயிரம் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யும்படி பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும் எவ்வித பயனும் ஏற்படவில்லையென்றும் அவர் மேலும் கூறினார். (ஒ)

## பாதிக்கப்பட்டோர் விபரம் சேகரிப்பு

நெடுந்தீவு, சனி

அண்மைக் காலத்தில் நடைபெற்ற வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை மெதடிஸ் கிறிஸ்தவ திருச்சபை நிவாரண உதவி வழங்கி வருவதுடன் மேலும் பாதிப்புற்ற மக்கள் பற்றிய விபரங்களையும் சேகரித்து வருகின்றது.

திருச்சபையின் யாழ்ப்பாண சேகரக்குரு அருட்திரு. கே. பி. கோவிந்தராஜா தலைமையிலான குழு இத் தகவல்களைத் திரட்டி வருகிறது (எ)

## முகாம் விஸ்தரிப்பு

ஒட்டுசுட்டான், சனி

மாங்குளம் இராணுவமுகாமிற்கும் பொலிஸ் நிலையத்திற்குமிடையிலுள்ள நெல் சந்தைப்படுத்தல் சபை களஞ்சியத்தை உள்ளடக்கிமுகாம் விஸ்தரிக்கப்படுகிறது.

களஞ்சிய எல்லை வேலிகளுக்கு முட்கம்பிவேலி அடைக்கப்படுகிறது.

அத்துடன் களஞ்சிய அலுவலகத்திற்கு முன் காவல் அரண் கட்டப்பட்டு சிப்பாய்கள் காவல் புரிகின்றார்கள். (எ)

## தோழர் ரமேஷ் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்

—ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தமது தோழரான ரமேஷ். தமது ஸ்தாபனத்தில் இழைத்த பாரதூரமான தவறுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படிச் சம்பவம் ஏனைய இயக்கங்களால் நடத்தப்பட்டதாக தவறாக கருதப்பட்டு சில பொது அமைப்புகள் குழப்பமடைந்துள்ளதாக கருதுகிறோம். எனவே அவற்றிற்கு இது ஸ்தாபனத்திற்குட்பட்ட நடவடிக்கை என்றும் இது தொடர்பான ஒழுங் நடவடிக்கைகளை ஸ்தாபனம் மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்' (மா)

## தற்காலிக பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, சனி

பொலிஸ் மா அதிபர் பதவியை தற்போது தற்காலிகமாக உதவிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஏணஸ்ற் பெரேரா பொறுப்பேற்றுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத் வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொண்டதை தொடர்ந்தே திரு. பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (சி)

## இளம் பெண் குண்டுவீச்சுக்குப் பலி

முல்லைத்தீவு, சனி

உறங்கிக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் குண்டு வீச்சுக்குப் பலியானார். அவருடன் உறங்கிக்கொண்டிருந்த அவரது குழந்தையும் தாயாரும் பலத்தகாயமடைந்தனர்.

மேற்படி சம்பவம் முல்லைத்தீவு சிலாவத்தை என்னுமிடத்தில் கடந்த வியாழனன்று இடம் பெற்றது.

ஹேமாவதி [வயது 28] என்னும் இளம்பெண்ணே குண்டு வீச்சுக்குப் பலியானவராவார்.

மேற்படி சம்பவத்தைக்கண்டித்தும் கொலைசெய்தவரைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குமாறு கோரியும் சிலாவத்தை மக்கள் இயக்கங்களிடம் துண்டுப்பிரசுரங்கள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## கிளி. கனிஷ்ட மகாவித்தியாலயம் நாளை தொடக்கம் கரடிப்போக்கில் இயங்கும்

கிளிநொச்சி, நிருபர்

இராணுவ அசம்பாவிதங்களை அடுத்து கடந்த நான்கு மாதகாலமாக மூடப்பட்டுக் கிடக்கும் கிளிநொச்சி இராணுவ முகமிற்கு அருகில் இருக்கும் கனிஷ்ட மகாவித்தியாலயம் நாளை 6ம் திகதி திங்கட்கிழமை கரடிப்போக்கிலுள்ள புனித திரேசாள் மகளிர் கல்லூரி கட்டிடமொன்றில் ஆரம்பமாகிறது.

இதற்கான நடவடிக்கையை மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம் எம் மன்சூர் கல்வி அதிகாரிகள், வட்டாரக் கல்வி அதிகாரிகள் கனிஷ்ட மகா வித்தியாலய அதிபர் ஜே. எம். பி. ஜெயராசா, உப அதிபர் திரு. ஜேசுதாசன் ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனை மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் இதுவரை கடமையாற்றிய பதினைந்து ஆசிரியர்களுக்கும் இடம் மாறும் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் கடமையாற்றவும் ஏனைய 25 ஆசிரியர்களுக்கும் மாவட்டத்தில் வேறு பாடசாலைக்கு இடமாற்றவும் கிளிநொச்சி நிலைமை சீராகும் வரை கனிஷ்ட மகாவித்தியாலயத்தை முன்னைய இடத்தில் நடத்துவதில்லை எனவும் இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. (எ)

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

காவலூர் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் மாத்தளை இராஜலிங்கம் எழுதிய 'புதிய யுக நாயகிகள்' கவிதைத் தொகுதி விமர்சன அரங்கு காவலூர் இலக்கிய வட்டத் தலைவர் ஆ. சபாரத்தினம் தலைமையில் சுருவில் சனசமூக நிலையத்தில் இன்று நடைபெறும். (ச)

## தீவிர சோதனை

புங்குடுதீவு, சனி

நெடுந்தீவில் இருந்து குறிக்காட்டுவான் நோக்கி கடந்த புதனன்று பிரயாணிகளுடன் வந்துகொண்டிருந்த குமுதினி படகு வழமைபோல நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினரால் தீவிர சோதனைக்குட்படுத்தப் பட்ட பின்னர் பிரயாணிகளை இறக்கி விட்டு நெடுந்தீவுக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

அங்கு நின்றவர்கள் தங்களுக்கு ஏதோ நடைபெறப் போகுதோ என எண்ணி பெரும்பதற்ற நிலைக்குள்ளானார்கள். சிறிது நேரத்தில் அனலைதீவிலிருந்து வந்த படகில் அனைவரும் குறிகாட்டுவானுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்

இச் சம்பவத்தினால் பொது மக்கள் தங்கள் பயணங்களை நேர காலத்திற்கு மேற்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டது. அது மட்டுமல்ல நெடுந்தீவுக்கு போக வேண்டிய தபால் பைகளும் நீண்ட நேரமாக குறிக்காட்டுவான் துறைமுகத்தில் காத்துக் கிடந்தன. மாலை 4மணிக்குப் பின்னரே நெடுந்தீவிலிருந்து வந்த படகில் பிரயாணிகள் சென்றனர். (எ)

## "கொள்ளையர்களிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது எமது கடமை"

-தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தமிழ் ஈழப் பிரதேசங்களில் அண்மையில் நடைபெற்ற வாகனக் கடத்தல், வழிப்பறிக்கொள்ளைகள், தனியார் கொள்ளைகள் என்பனவற்றை கண்டித்து வடபிரதேச லொறிப் போக்குவரத்து சங்கமும், யாழ் முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும், யாழ் வர்த்தகசங்கம் இணைந்து நடத்தும் இப்போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்." "இவ்வாறான சம்பவங்கள் மக்களுக்கும் இயக்கங்களுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிக்க வைக்கின்றன. சிங்கள இராணுவத்திடமிருந்து மக்களைப் பாதுகாப்பதுபோல் இவ்வகையான கொள்ளையர்களிடமிருந்தும் மக்களைப் பாதுகாப்பது எமது கடமையாகும்."

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'இக்கடமையில் இருந்து இயக்கங்கள் தவறியது மனவேதனைக்குரியதே. இன்னமும் யாழ்ப்பாண மக்களது பொருளாதாரம் கொழும்பில் தங்கியிருக்கையில் இதற்கான மாற்று நடவடிக்கை எதையும் மேற்கொள்ளாது இதனை சீர்குலைப்பதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

'இப்போராட்டம் நடைபெறுவது சம்பந்தமாக வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்திலுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதையும் இதுபோன்ற செயல்களை நாம் இதற்கு முன்பும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றோம் என்பதையும் மேலும் இப் போராட்டம் வெற்றிபெற எம்மாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.' (மா)

## நாளை முதல் மறு அறிவித்தல்வரை சகல சேவைகளும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ். மாவட்டத்தில் யாழ். ஒலிஒளி ஒன்றியத்தின் அனுசரணையுடன் இயங்கும் சகல சேவைகளும் நாளை தொடக்கம் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி, தமது சேவை நேரங்களில் சிறைச்சாலை போராட்டம் தொடர்பாக தொலைக்காட்சி மையம் வெளியிட்டுள்ள விவரணப்படங்களையும் சோக இசையினையும் மட்டும் ஒளிபரப்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் தொடரும் போராட்ட நடவடிக்கைகளையிட்டு சிறீலங்கா அரசு பராமுகமாக இருப்பதைக் கண்டிக்கும்முகமாகவும் இப்போராட்ட நடவடிக்கைகளின் 2ம் கட்ட நிகழ்வுகளுக்கு ஆதரவளிக்குமுகமாகவும் மாணவர் கூட்டமைப்பு விடுத்த வேண்டுகோளுக்கமைய மேற்குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மா)

## தீவுப்பகுதி நோக்கி அத்தியாவசிய உணவுப்பொருள்

நெடுந்தீவு, சனி

வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றால் தீவுப்பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் பெருஞ்சிரமம் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டு, யாழ்ப்பாண மாவட்ட பிரதி உணவுக் கட்டுப்பாட்டாளர் அத்தியாவசிய உணவுப் பொருள்களை தீவுப்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன் கூட்டியே இருப்பு வைக்கும் பொருட்டு வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளார்.

இதற்கான "விசேஷ கடன்" வழங்கல் கட்டளைகள் உணவுத் திணைக்களத்தால் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த விசேஷ கடன் வழங்கல் கட்டளைக்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, மா, சீனி ஆகியவற்றை சங்கங்கள் தத்தமது வழமையான இருப்புடன் சேர்க்காது களஞ்சியங்களின் பிறிதொரு இடத்தில் இருப்பு வைத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை அவ்வப் பிரிவு உதவி அரசாங்க அதிபரின் அங்கீகாரத்துடனேயே இவ்வுணவுப் பொருள்களைச் சங்கம் பயன் படுத்துதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## செப். மாத ஒய்வூதியம் இதுவரை வழங்கப்படவில்லை

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் வழங்கப்பட வேண்டிய ஒய்வூதியம் பதினைந்து நாட்களுக்கு மேலாகியும் கொடுக்கப்படவில்லை என அறியப்படுகிறது.

கிளிநொச்சி மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் அசம்பாவித நிலைமைகளால் கடந்த நான்கு மாதங்களாக மூடப்பட்டுக் கிடப்பதையடுத்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் இயங்கும் கிராமிய வங்கிகளில் ஒய்வூதியப் பணம் பெற அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஒய்வூதியம் கிடைக்காததால், ஒய்வூதியம் பெறுவோர் தினமும் கச்சேரிக்கும் கிராமிய வங்கிக்கும் படையெடுத்து வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126